பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 31 வியாழக்கிழமை 16.09.2021 கதிர் 315

இது ரகசியம் அல்ல!

'வந்ததும் அது, சிவன் தந்ததும் அது' என்பார்கள். வந்து சேர்ந்த மனைவி மீதும், கிடைத்த பிள்ளை மீதும் வெறுப்புற்றுப் பேசும்போது இப்படிச் சொல்வதுண்டு. இது குடும்பஸ்தனின் பிரபலாபம்.

அப்படித்தான் பக்கம்02

## 132 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 132 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 699 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 132 பேரில் 66 2

# நாட்டை முழுமையாகத் திறக்கும் ஆரோக்கிய நிலைமை இல்லை!

## ஜனாதிபதியிடம் வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டு



நாட்டை முழுமையாகத் திறக்கும் அளவுக்கு ஆரோக்கியமான மட்டத்தை நாம் இன்னமும் அடையவில்லை. இப்போதும் நாட்டில் டெல்டா வைரஸ் தொற்று வேகமாகப் பரவிக் கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் கட்டுப்பாடுகள் இல்லாது நாட்டைத் திறந்தால், மிக மோசமான இன்னொரு கொரோனா வைரஸ் அலைக்கு முகங்கொடுக்க நேரிடும்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் 2

## நேற்று மட்டும் 2,314 பேருக்கு கொரோனா!

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 314 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் 2

## தமிழ் அரசியல் கைதிகளை ஆயுதமுனையில் அச்சுறுத்திய

# லொஹானின் அராஜகத்துக்கு எதிராக ஐ.நா. கடும் கண்டனம்



## இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி காட்டமான 'ருவிட்'

அனுராதபுரம் சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியில் தமிழ் அரசியல் கைதிகள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்ட சம்பவத்துக்கு இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ருவிட்டர் செய்தியொன்றையும் வெளியிட்டுள்ளார். 2



## நேற்று நால்வர் வவுனியாவில் பரிதாப மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான 11

## தியாகி திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

இந்திய – இலங்கை அரசுகளிடம் நீதி கோரி – 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 34ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பமானது.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில், உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த தியாக தீபம் திலீபன், 12ஆவது நாளான, செப்டெம்பர் 26ஆம் திகதி உயிர்நீத்தார்.

அவரது தியாகத்தை நினைவுகூரும் வகையில், உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த 34ஆவது ஆண்டு 2



## வவுனியாவில் 67 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 67 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் 11

## அநுராதபுரம் சிறைக்குள் நடந்தது என்ன?

# பாதணிகளை நக்கச் சொன்ன லொஹானின் சக நண்பர்கள்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அமைச்சருடன் (சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் மறுசீரமைப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே) சென்ற அமைச்சரின் சக நண்பர்கள், தமது பாதணிகளை நாக்கினால் நக்கிச் சுத்தம் செய்யுமாறு தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தி சித்திரவதை செய்தனர்.

– இவ்வாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்தனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வழக்கம் போல் ஊடக அறிக்கைகளை விடுத்து பின்னர் ஓய்ந்து போவது எமது தலைவர்களது பண்பாடாகும். அவ்வாறில்லாமல் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தமிழ் அரசியல் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும்.

கைதிகளது நலன்களைப் பாதுகாக்கும் ஓர் அமைச்சராக இருந்து கொண்டு எமது 11

## அரசியல் கைதிகளைச் சந்திக்க இன்று அ'புரம் செல்கிறார் நாமல்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திப்பதற்காக இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்று அநுராதபுரத்துக்குச் செல்லவுள்ளார். 11



## உடுப்பிட்டியைச் சேர்ந்த குழந்தை புரைக்கேறியதில் பரிதாப மரணம்

### பரிசோதனையில் கொரோனாத் தொற்று

மந்திகை ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட 15 மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை உயிரிழந்த நிலையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியைச் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருக்கின்றது ராஜபக்ஷக்களின் அரச நிர்வாகமும் போல.

இந்தச் சமயத்தில் அநுராதபுரம், வெலிகடை சிறைச்சாலைகளுக்குச் சென்ற லொஹான் ரத்வத்தையின் கதையைப் பார்க்கும்போது எனக்கு ஒரு பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்துக்கு வந்து ஆறு மாதங்கள் கூட பூர்த்தியாகவில்லை. அவரது அதிகாரத்தின் கீழ் நாடு வந்த பின்னர் முதலாவது சர்வதேச ஊடக சுதந்திர தினம் 2006 மே 3ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருந்தது. அதையொட்டி, கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச ஊடகவியலாளர்களில் மாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதம விருந்தினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதில் பங்குபற்ற வெளிநாடுகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஊடகப் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

வெறி கொண்டலைந்த அவரது அரசின் கூலிப்படைகள் முதல்நாள் இரவு, நான் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணப் பத்திரிகையின் அலுவலகத்துக்குள் புகுந்து கண்மண் தெரியாமல் மிருகத்தனமான தாக்குதலை நடத்தின. அலுவலகத்துக்குள் இருநூறுக்கும் மேற்பட்ட வேட்டுகள் தீர்த்துத் தள்ளப்பட்டன. முகாமையாளரும் விநியோக ஊழியர் ஒருவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றிருவர் படுகாயமடைந்தனர். ஆசிரிய பீடத்தில் கணினிகள், விலையுயர்ந்த கருவிகள், தளபாடங்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டன.

அடுத்த நாள் விடிந்தபோது, சர்வதேச ஊடக தினத்தில் யாழ் பத்திரிகைக்கு ஏற்பட்ட மிகக் கொடூரமான விடயங்களைக் கேட்டு இலங்கையும் ஊடக உலகமும் விக்கித்துப் போய் நின்றன. எனினும் அத்தனை கோர இழப்புக்குப் பின்னரும், உயிரிழந்த சக ஊழியர்களின் சடலங்கள் மரண விசாரணைகளின் பின்னர் அலுவலகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட முன்னரே, அந்த அதிர்ச்சி தரும் படங்கள் செய்திகளுடன் விடிகாலையில் பத்திரிகை தடைப்படாமல் வெளிவருவதை உறுதி செய்தேன். அதுவல்ல விடயம்.

அடுத்த நாள் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சர்வதேச ஊடகவியலாளர்கள் முன்னிலையில், அந்த மாநாட்டின் பிரதம விருந்தினர் என்ற முறையில் நாட்டின் ஜனாதிபதி பேச வந்தபோது, நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருந்த ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர், முதல் நாள் இரவு யாழ்ப்பாணப் பத்திரிகைக்கு நேர்ந்த கொடூரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மண்டபத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். மஹிந்தர் அவமானத்தால் கூனிக் குறுக வேண்டியவரானார்.

அத்தகைய ஒரு வேலையைத்தான் லொஹான் ரத்வத்தை செய்திருக்கின்றார். 13ஆம் திகதி திங்கட்கிழமை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 48ஆவது அமர்வு ஆரம்பமாகவிருந்தது. அதிலே இலங்கை விடயம் பேசப்படவிருந்தது. பயங்கவாதத் தடைச் சட்டம் இலங்கையில் தொடர்ந்து நீடிக்கப்படுகின்றமை, அச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் பரிதாபம், பொலிஸ் காவலில் இருப்போர் தொடர்ந்து கொல்லப்படுவது, நீதித்துறை மூலமான முறையற்ற அழுத்தங்கள் குறித்தெல்லாம் ஜெனிவாவில் பேசப்படும் என எதிர்பார்க்கப்பட்ட சமயம் அது. போதாக்குறைக்கு ஐ.நா. பொதுச் சபையின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக அடுத்த வாரம் நாட்டின் ஜனாதிபதி அமெரிக்கா போகவிருக்கின்றார். சரியாக ஒரு வாரத்தில் அவரின் உரை நிகழவிருந்தது.

ஜெனிவாக் கூட்டத்துக்கு முதல்நாள் இரவு வெலிக்கடைச் சிறைக்குள்ளும், அடுத்த நாள் கூட்டம் ஆரம்பமாக இருக்கையில் அநுராதபுரம் சிறைக்குள்ளும் புகுந்து அட்டகாசம் பண்ணி, அப்பாவித் தமிழ் அரசியல் கைதிகளின் ஆபத்து நிலையை அம்பலப்படுத்தியிருக்கின்றார் சிறைத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்துக்கு முதல் நாள் யாழ். பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்து கொலை வெறித் தாக்குதல் நடத்தி, மஹிந்தவின் முகத்தில் கரி பூசியது அவர் வளர்த்த புலனாய்வுப் பிரிவும் அதன் கூலிப் பட்டாளமும்.

அதே மாதிரி ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டம் நடக்கவிருக்கையில் ஜனாதிபதி கேட்டாபாயவின் முகத்தில் கரி பூச வைத்திருக்கின்றார் அவர் செல்லப்பிள்ளை போன்று போஷிக்கும் லொஹான் ரத்வத்தை.

குடித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்த லொஹான் ரத்வத்தையிடம் அவரின் குடிகார சகாக்கள் மரண தண்டனை நிறைவேற்றப்படும் – கழுவேற்றும் – இடத்தை பார்க்க விரும்புகின்றார்கள் எனக் கூறியிருக்கின்றனர். தாமே சிறைத்துறை அமைச்சர் என்ற பந்தாவில் முன்னிரவு நேரம் அந்தக் கும்பலுடன் வெலிக்கடைச் சிறைக்கு வந்திறங்கியிருக்கின்றார் அவர். அப்போது அவருக்கு முழு ஏற்றம். அழகு ராணியான யுவதி ஒருவரும் அந்தக் கும்பலில் இருந்திருக்கின்றார்.

அதிகாரமும் போதையும் தலைக்கேற வெலிக்கடைக்குள் அட்டகாசம் பண்ணிய அமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளைக் கூட்டிவரும்படி சத்தமிட்டிருக்கின்றார். நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்ட சிறை அதிகாரிகள், அரசியல் கைதிகள் வெலிக்கடையில் இல்லை, அநுராதபுரம் சிறையில்தான் என்று கூறி சமாளித்திருக்கின்றனர். ஒருவாறு அமைச்சரையும் குழுவினரையும் தாஜா பண்ணி அனுப்பி வைத்திருக்கின்றனர்.

ஆனால் காலையில் விடிந்ததும், அந்த யுவதியைத் தவிர்த்து ஏனையோரோடு அநுராதபுரத்துக்குப் புறப்பட்டிருக்கின்றார் அமைச்சர் – தமிழ் அரசியல் கைதிகள் மீதான தனது அதிகாரத்தைக் காட்டி, தனது நண்பர் குறூப்பிடம் தனது 'கலர்ஸை' வெளிப்படுத்த.

ஜனாதிபதியுடன் தமக்கிருந்த தொடர்பு என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு நள்ளிரவிலேயே ஹெலிக்கொப்டரை ஏற்பாடு செய்து. காலையில் விடிந்ததும் அநுராதபுரம் பறந்திருக்கின்றார் – மீண்டும் 'புல்'லாக ஏற்றிக் கொண்டு.

தன்னிலை மறந்த லொஹான் ரத்வத்தை அநுராதபுரத்தில் தமது நண்பர் குழாமுடன் நடந்து கொண்ட முறைமை விவரிக்கப் பொருத்தமற்றது. அவ்வளவு கேவலமானது.

அவர் செய்தவை அனைத்தும் கிரிமினல் நடவடிக்கை. பாதிக்கப்பட்ட – அச்சுறுத்தப்பட்ட – கைதிகள் முறைப்பாடு செய்தால் லொஹான் ரத்வத்தை உடன் கைது செய்யப்பட வேண்டும். ஆனால் அது நடக்காது என்று தெரிகின்றது.

இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆராய ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் விண்ணப்பித்து வெளியே வருவதற்கான வாய்ப்பை ஆவலுடன் பார்த்திருக்கின்றார்கள் அரசியல் கைதிகள். இச்சமயத்தில் உண்மையைத் துணிச்சலுடன் எடுத்துரைத்து, அவர்கள் தைரியமாக சட்ட முறைப்பாடுகளைச் செய்வார்களாயின் அதற்கு நீதி கிடைக்குமோ எண்ணவோ சந்தேகம்தான். ஆனால், அவர்கள் – அந்தக் கைதிகள் – விடுதலையாகி வெளியே வருவதற்கு இருந்த வாய்ப்பு அடியோடு அடிபட்டுப் போய்விடும்.

நம் சகோதரர்களான அந்த அரசியல் கைதிகளின் அவல நிலைமை இது தான். இதனால், அட்டகாசம் பண்ணிய லொஹான் ரத்வத்தை தப்பிப் போவதற்கான வாய்ப்புகளே அதிகம் உண்டு.

★ ★ ★

தமிழ்க் கூட்டமைப்பு சார்பாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் ஜெனிவாவுக்கு அனுப்பிய கடிதத்துக்குப் புறம்பாக, தமிழரசின் ஜிஞ்சர் குறூப் ஒன்று பிறிதொரு கடிதம் அனுப்ப முயன்றமை தொடர்பாக சர்ச்சைகள் வெடித்தமை தெரிந்ததுதானே...!

அத்தகைய கடிதத்தில் ஒப்பமிட்டவர்கள் எனக் கூறப்படும் தமிழரசின் ஒன்பது பிரமுகர்களில் சி.சிறிதரன் எம்.பி. தவிர ஏனைய அறுவரிடமும் அப்படி ஒரு கடிதத்தில் ஒப்பமிட்டீர்களா என்று கேட்டு, விளக்கக் கடிதம் அனுப்பியிருக்கின்றார் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

இந்தக் கடிதத்தின் பின்னணியில் கட்டவிழ்ந்த விடயங்கள் குறித்து நாளை பார்ப்போம் வாசகர்களே...!

– மின்னல் –

## லொஹானின் அராஜ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மண்டேலா விதிகளுக்கு அமைய சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும் எனவும் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறைக் கைதிகள் மோசமாகப் பராமரிக்கப்படுவதை ஐ.நாவின் இலங்கை அலுவலகம் வன்மையாகக் கண்டிக்கின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குக் கடந்த 12ஆம் திகதி மதுபோதையில் கைத்துப்பாக்கியுடன் சென்ற சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு விவகார இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அங்கு தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தலை விடுத்திருந்தார்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டம் தற்போது நடந்துவரும் சூழ்நிலையில், இராஜாங்க அமைச்சரின் இந்தச் செயற்பாடு இலங்கை அரசுக்கு மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதால் அவரை உடனடியாக இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு அரச மேல் மட்டம் கோரி இருந்தது.

இதன்படி தனது இராஜிநாமாக் கடிதத்தை நேற்று முற்பகல் லொஹான் ரத்வத்த, ஜனாதிபதிக்கு அனுப்பினார்.

லொஹான் ரத்வத்தவின் இராஜிநாமாக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்றுப் பிற்பகல் அறிவித்துள்ளது.

## 132 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்களும், 66 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் ஆண் ஒருவரும், பெண் இருவரும் என மூவர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். 18 ஆண்கள், 10 பெண்கள் என 28 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 101 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 47 ஆண்களும், 54 பெண்களும் அடங்குகின்றனர்.

## உடுப்பிட்டியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த ஒரு வயதும் 3 மாதங்களும் நிரம்பிய குழந்தை புரைக்கேறிய நிலையில் நேற்று அதிகாலை மந்திகை ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தது.

குழந்தையின் சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 96 ஆயிரத்து 423 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 11 ஆயிரத்து 605 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 27 ஆயிரத்து 254 ஆக உயர்வடைந்துள்ளது.

## நாட்டை முழுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட வைத்திய நிபுணர்கள் நேற்று கூட்டாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பலவீனமான சுகாதாரக் கட்டமைப்பு காரணமாக நாட்டில் தென்னாபிரிக்க வைரஸ் பரவ அதிக வாய்ப்புகள் உள்ளன எனவும் விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாக இன்னமும் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலில் இருந்து நாம் விடுபடவில்லை. ஒவ்வொரு நாளும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். ஒரு வாரத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்களும், ஆயிரம் அல்லது ஆயிரத்தையும் தாண்டிய வாராந்த கொரோனா மரணங்களும் இன்னும் நாட்டில் பதிவாகிக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில். இது சாதாராண நிலைமை அல்ல. நாம் இப்போது கட்டுப்பாடுகள் இல்லாது செயற்பட முடியும் என்றோ அல்லது நாடு தற்போது எச்சரிக்கை மட்டத்தில் இருந்து விடுபட்டுள்ளது என்றோ எம்மால் ஒருபோதும் கூறிவிட முடியாது. நாம் இப்போதும் சிவப்பு எச்சரிக்கை மட்டத்திலேயே உள்ளோம் எனவும் விசேட வைத்திய நிபுணர்கள், ஜனாதிபதியிடம் மேலும் தெரிவித்துள்ளனர்.

## தியாகி திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நினைவு நாளான நேற்று நல்லூரில் உள்ள திலீபனின் நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

நல்லூர் நினைவேந்தல் தூபிக்கு நேற்று மாலை சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஈகச்சுடர் ஏற்றி, திலீபனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.



# தமிழர்களின் துயர நிலைமையயறிந்து ஐ.நாவின் கூடுதல் கரிசனை வேண்டும்

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகியது. இதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் தனது வாய்மூல அறிக்கையைக் கையளித்திருந்தார். அதனை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வரவேற்றுள்ள அதேவேளையில், பல்வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் ஐ.நாவை மட்டுமே நம்பியுள்ள நிலையில், ஐ.நா. இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளது. இது தொடர்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபை என்பது இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர், உலகில் ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் நாடுகளுக்கிடையில் - தேசங்களுக்கிடையில் - தேசிய இனங்களுக்கிடையில் - முரண்பாடுகளையும் பிளவுகளையும் சீர்செய்வதற்காக உருவாக்கப்பட்டது. இதற்காக ஐ.நா. சபை தனது ஆளுமையின்கீழ் பல்வேறுபட்ட நிறுவனங்களை ஸ்தாபித்துள்ளது. சுகாதாரம், உணவு, வறுமை ஒழிப்பு, கலாசாரம், கல்வி போன்ற பல்வேறு நிறுவனங்களை உருவாக்கி வறுமையின் பிடியிலிருந்தும் தொற்றுநோய்களிலிருந்தும் மக்களைக் காப்பாற்றுவது மாத்திரமல்லாமல், மக்களது அடிப்படை உரிமைகள், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, மக்கள் மீதான இறையாண்மை போன்றவற்றைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாகத்தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் தோற்றுவிக்கப்பட்டது.

இலங்கையில் யுத்தம் முடிவிற்கு வந்தவுடன், யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஒரு பொறுப்புக்கூறல் நடவடிக்கையைத் தாங்கள் மேற்கொள்கிறோம் என அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்றைய ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்திருந்தார். அதன் பிரகாரம் ஐ.நா. பொதுச்செயலாளரால் ஒரு நிபுணர்குழு அமைக்கப்பட்டு அந்த நிபுணர் குழு ஓர் அறிக்கையைத் தயார் செய்தது. அந்த அறிக்கையில், இலங்கை அரசாங்கம் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன எனவும் அது மேலும் விசாரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அந்த அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் மேற்கண்ட குற்றங்கள் தொடர்பாக பல்வேறுபட்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தத் தீர்மானங்கள் இலங்கை அரசைக் கட்டுப்படுத்தாது என்றும் தாங்கள் இதிலிருந்து வெளியேறுவதாகக் கூறி இலங்கை அரசாங்கம் இந்தத் தீர்மானங்களிலிருந்து வெளியேறிக் கொண்டது. ஆனாலும்கூட 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து 46/1 தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபொழுது, இலங்கை அரசாங்கம் இந்தத் தீர்மானங்களிலிருந்து வெளியேறியதை மையமாகக் கொண்டும் அவர்கள் எத்தகைய விசாரணைப் பொறிமுறைகளையோ, நீதிப்பொறிமுறைகளையோ உருவாக்குவதற்கு எதிர்வினையாற்றியதை மையமாகக் கொண்டும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை அரசாங்கம் பாரதூரமான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டதுடன், இலங்கை அரசாங்கத்தின்மீது சர்வதேச அழுத்தங்கள் கொண்டு வரப்படவேண்டும் என்றும் ஆணையாளர் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையின்தொடர்மனிதஉரிமைமீறல்களைஆணையாளர் சுட்டிக்காட்டியாட்டியிருக்கின்றமை வரவேற்கும் அதேநேரம், இலங்கை தொடர்பான ஜெனிவாத் தீர்மானங்கள் எக்காரணங்களுக்காக உருவாக்கப்பட்டனவோ அது இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கின்ற வேளையில் அவை தொடர்பான குறிப்புகள் இல்லாமல் இலங்கையில் நடைபெற்றுவருகின்ற தற்போதைய பரந்துபட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே இந்த அறிக்கை அதிக கவனம் செலுத்தியிருக்கிறது என்பதை பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற வகையில் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நிலைமை அவ்வாறு இருந்தபொழுதும்கூட, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிறிலங்கா அரசாங்கத்தால் நெருக்கடிக்குள்ளும் அடக்குமுறைக்குள்ளும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். தமிழ் மக்களின் காணிகள் பறிமுதல் செய்யப்படுகின்றன, மரணித்தவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்த முடியாத நிலை தொடர்கின்றது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்படுகின்றனர், தமிழ் மக்களின் புராதானச் சின்னங்கள் அகற்றப்பட்டு அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் கணக்கான காணிகளும் அபகரிக்கப்படுகின்றன. ஒரு தேசிய இனத்திற்கு எதிராக இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்ற இந்த அரசாங்கம் மறுபுறத்தில் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைப்பதற்காகவும் முன்னர் உருவாக்கிய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பரீசிலிப்பதற்கும் (எல்.எல்.ஆர்.சி. மற்றும் பரணகம ஆணைக்குழு அறிக்கைகள்) மறறுமொரு ஆணைக் குழுவை நியமித்துள்ளது. அதுமாத்திரமல்லாமல், காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான அலுவலகங்களைத் திறந்து வருவதாகவும் அவர்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கு கடந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கியிருப்பதாகவும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதன் அடிப்படையில் ஐ.நா. சபையுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றது. இது வெறுமனே ஒரு கண்துடைப்பு மாத்திரமல்லாமல், காலத்தைக் கடத்தி, தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளை நீர்த்துப் போகச் செய்வதற்கான ஒரு யுக்தியாகும். ஆனால், இவ்வாறான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணையகம்ப பரிவுடன் கவனத்தில் கொண்டுள்ளமை மாத்திரமல்லாமல், இலங்கை அரசாங்கம் அந்த விடயங்களைச் செய்யும் என்ற எதிர்பார்ப்பையும் வெளியிட்டிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளரின் மார்ச் 2021ஆம் ஆண்டின் அறிக்கை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும். தாங்கள் நிம்மதியாக வாழ்வோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் மேல் முழுவதும் நம்பிக்கையிழந்து, கொல்லப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக உங்களை மட்டுமே நம்பி காத்திருக்கும் மக்களுக்கு மனித உரிமைகள் ஆணையகத்தின் செப்டெம்பர் 2021 அறிக்கை என்பது, மனச்சஞ்சலத்தையும் அமைதியின்மையையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. ஒருசில வாரங்களுக்கு முன்புதான் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எந்தத் தேடுதலையோ வேறெந்த நடவடிக்கைகளையோ நடத்த வேண்டாம் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கும் சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்தின் மேல் நம்பிக்கைகொண்டு, அவர்கள் அனைத்தையும் செய்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்திருப்பது தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், அதனைக் கையாள்வதில் - யுத்தத்திலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதில் - ஐ.நா. தவறிழைத்துவிட்டதோ என்பதைக் கண்டறிவதற்காக ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டதை அனைவரும் அறிவர். ஏற்கனவே இந்த விடயத்தில் ஐ.நா. தன்னை சுயவிமர்சனம் செய்துள்ளது. அதேபோல் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் தவறிழைக்காமல் செயற்பட வேண்டுமென்பதே தமிழ் மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

கடந்த மார்ச் மாத அறிக்கையிடுதலின்போது இலங்கை அரசாங்கத்துக்கு மேல் பொருளாதார, பிராயணத் தடைகள் கொண்டுவரப்படுமாக இருந்தால், அது ஒட்டுமொத்தமான இலங்கை மக்களையும் பாதிக்கும் என்ற அடிப்படையில், அவ்வாறான தடைகளுக்குப் பதிலாக சர்வதேசச் சட்டங்களைப் பின்பற்றுகின்ற அரசுகள் தத்தமது நாடுகளில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் இந்த இடைப்பட்ட ஆறு மாதங்களில் தமிழ் மக்களின்மீது மோசமான அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டனவே தவிர, அச்சத்தின் மத்தியில் வாழ்கின்ற தமிழ் மக்களை அரவணைத்து அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

காலம் கடந்துபோவதற்கு முன்பாக இலங்கை அரசாங்கம் தனது நாட்டின் ஒருபகுதி குடிமக்களுக்கு எதிராகச் செயற்பட்டது என்பதையும் இதனால் அவர்களில் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் என்பதையும் ஐ.நா. சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலமாகவே இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடக்காதவாறு தடுப்பதற்கும் தமிழ் மக்களுக்கு உரித்தான நீதி கிடைப்பதற்கும் வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.

ஐ.நாவின் மீதும் அதன் உறுப்பு அமைப்புகள் மீதும் தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை ஐ.நாவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகமும் காப்பாற்றும் என்று எதிர்பார்க்கின்றோம். - என்றுள்ளது.

# தமிழர்களின் மனித உரிமை செயற்பாடுகள் சர்வதேச நம்பிக்கையை வலுப்பெறவைக்கும்

## துரைரெத்தினம் தெரிவிப்பு

எதிர்காலத்தில் தமிழர்களின் மனித உரிமை தொடர்பான செயற்பாடுகள் சர்வதேசத்தின் மீது நம்பிக்கையை வலுப்பெற வைக்கும் என கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப், பத்மநாபா அணியைச் சேர்ந்த வருமான இரா.துரைரெத்தினம் தெரிவித்துள் ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஐக்கிய நாட்டு மனித உரிமைகள் தொடர்பான அமைப்பால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், தமிழ் மக்களினது மனித உரிமைகளும் எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

மேலும், மனித உரிமை தொடர்பான செயற்பாட்டுக்குழு, சிறப்பான முறையில் செயற்பட்டதன் காரணமாகவே பல நாடுகள் தமிழர்களுக்குப் புகலிடம் வழங்கியதை மறைக்க முடியாது.

குறிப்பிட்ட காலத்திற்கு முன் ஓரிருவர் இது தொடர்பாக செயற்பட்டாலும் புலம்பெயர் நாடுகள் குறுகிய வட்டத்துக்குள் சிந்திக்கவில்லை.

மேலும், மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு விரலை நீட்டினாலும் அந்த செயற்பாடு உண்மைக்கு மாறாக இருக்காது.

ஆயுதப்போராட்டம் நடைபெற்ற பல நாடுகளிலும் பல தசாப்தங்களுக்கு மேலாக மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகள், சர்வதேச மனித உரிமை அமைப்பால் முடக்கிவிடப்பட்டன.

இதேவேளை எதிர்காலத்தில் தமிழர்களின் மனித உரிமை தொடர்பான செயற்பாடுகள், சர்வதேசத்தின் மீது நம்பிக்கையை வலுப்பெற வைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# விவசாயிகளிடம் இருந்து நெல்லை ரூ 55க்கு கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானம்

விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நாட்டரிசி நெல்லை 55 ரூபாவுக்கு நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லை அரிசியாக்கி சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

# கொரோனா தொற்றுக்கு உள்ளான 11 மாத குழந்தைக்கு வைத்தியசாலையில் நடந்தது காதுக்குத்து நிகழ்வு

திருகோணமலையில் பெற்றோர்களால் கைவிடப்பட்ட நிலையில் சிறுவர் இல்லத்தில் வசித்து வந்த 11 மாதக் குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த குழந்தை, கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அங்குள்ள வைத்தியசாலை ஊழியர்களால் அக்குழந்தைக்கு காதுக்குத்து நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது. குறித்த குழந்தை கந்தளாய் ஆதார வைத்தியசாலை கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், வைத்தியசாலை ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பௌத்த அரசின் வக்கிரம்

'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' – என்று கூறுவது பற்றிய பேச்சுமொழி ஒன்று நம் மத்தியில் உண்டு. கடன்காரன் வருவதை அறிந்து தகப்பன் குதிருக்குள் ஒளித்து கொண்டானாம். புத்திசாதுரியமற்ற மகன் கடன்காரனிடம் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று கூறி தகப்பனை மாட்டிவிட்டானாம். அதுபோல இருக்கின்றது கோட்டா அரசின் செயல்.

சிறைக்குள் புகுந்து, கிரிமினல் குற்றச்செயலைப் புரிந்த அடாவடி அமைச்சரின் ஓர் அமைச்சுக்கான இராஜினாமாவை ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து அவரை பிற அமைச்சு ஒன்றின் அமைச்சராக வைத்திருக்கும் ஜனாதிபதியின் செயல் அப்படித்தான் உள்ளது.

பத்திரிகைகளில் வெளியான செய்திகளினால் தாம் சார்ந்த அரசுக்கு அசௌகரியம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு விவகார அமைச்சர் பதவியைத் தாம் இராஜினாமாச் செய்கிறார் எனத் தெரிவித்திருக்கின்றார் லொஹான் ரத்வத்தை. தமது இராஜினாமாக் கடிதத்தில், வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் நடந்த சம்பவங்களுக்குத் தாம் பொறுப்பேற்கின்றார் என்று அவர் தெரிவிக்கவே இல்லை.

ஆனால், ஜனாதிபதியின் அலுவலகமோ மேற்படி இரு சிறைச்சாலைகளிலும் தன்னால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்குப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அவர் பதவியை இராஜினாமாச் செய்கின்றார் என அறிவித்தமையை அடுத்து, ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கின்றது.

ஆக, இழைக்கப்பட்டது பாரதூரமான – மிக மோசமான – விடயம். சிறைக் கைதிகளின் புனர்வாழ்வுக்குப் பொறுப்பான – சிறைகள் மறுசீரமைப்புக்கு வழி செய்ய வேண்டிய – அமைச்சரே, மதுபோதையுடன் தனது போதைக்கூட்ட சகாக்களுடன் இரண்டு சிறைகளுக்குள்ளும் துப்பாக்கியோடு, வேளை கெட்ட வேளைகளில் அடாவடித்தனமாகப் புகுந்திருக்கின்றார். அரசாங்கத்தின் சார்பில் கைதிகளைப் பாதுகாக்க வேண்டிய பிரதான கடப்பாடு கொண்ட அரச பிரதிநிதி, அரசியல் கைதிகளை முழங்காலில் மண்டியிட வைத்து, துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தி, மோசமாக – மிக மோசமாக – மிருகத்தனமாக நடந்திருக்கின்றார். மனோ கணேசன் எம்.பி. கூறுகின்றமை போல மனிதர்களின் ஆத்ம கௌரவத்தை அவமானப்படுத்தும் குரூர நடவடிக்கை இது.

அதுவும் ஒரு மனிதனை சிறையில் அடைத்து விட்டு, அந்தச் சிறைக் கைதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்க வேண்டியவரே மிருகத்தனமாக நடந்திருக்கின்றார்.

அவரை, அத்துறை தொடர்பான அமைச்சிலிருந்து மட்டும் விலக்கி விட்டு, பிற அமைச்சுகளுடன் அமைச்சராகத் தொடர அனுமதித்திருக்கின்றார் தார்மீகப் பொறுப்புப் புரியாத நாட்டின் தலைவர்.

பௌத்தம் பற்றிய வகுப்பெடுக்கும் அரசின் வக்கிர புத்தியின் வெளிப்பாடு இது என மனோ கணேசன் குறிப்பிடுகின்றமை முழுவதும் உண்மை. பஞ்சசீலத்தின் பெயரால் பௌத்த, சிங்கள இனவெறி நடத்தும் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றுதான் இந்த நடவடிக்கை.

இதைப் புரிந்த அடாவடிப் பேர்வழி உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அமைச்சுப் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும். நீதி, சட்ட விசாரணைகள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும்.

கைதிகளின் பாதுகாப்புக்கு நீதிமன்றங்களும் பொறுப்பு என்பதால் – இந்த நாட்டில் சரியான நீதித்துறை இருக்குமானால் – நீதிமன்றங்கள் தாமே தலையிட்டு இதில் நடவடிக்கை எடுக்க முடியும். எடுக்க வேண்டும். இத்தகைய விடயங்களைச் சுயாதீனமாகக் கையாள்வதில் இந்தியாவைப் போல இலங்கையின் நீதித்துறை அவ்வளவு உயர்வானதாக இல்லை என்பது நமது துரதிஷ்டம்தான்.

# அநுராதபுரம் சிறைச் சம்பவம் மிகவும் பாரதூரமான ஒன்று!

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஆவேசம்




அநுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் சிலரை, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த துப்பாக்கிமுனையில் முழந்தாளிட வைத்து பயமுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கும் முறையீடு மிகவும் பாரதூரமானது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர் அமைச்சர் என்ற பதவி நிலையில் உள்ளவர். அதுவும், சிறைச்சாலைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்.

அமைச்சுப் பொறுப்பில் உள்ள ஒருவருக்கு எதிராக இத்தகைய குற்றச்சாட்டு முன் எப்பொழுதும் இந்த நாட்டில் எழுந்தமை கிடையாது.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் நீதிமன்றக் கட்டளைகளின் பிரகாரமே அங்கு தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

மனிதர்கள் என்ற முறையிலும், இந்த நாட்டின் குடிமக்கள் என்ற அடிப்படையிலும் அரசியல் சாசனத்தின் கீழ் அவர்களுக்கு பல்வேறு உரிமைகள் உள்ளன.

அரசியல் அதிகாரத்தை எவரும் அவர்களுக்கு எதிராகப் பிரயோகித்து அடாவடித்தனமாக நடந்து கொள்வதற்கு சட்டத்தில் அறவே இடம் இல்லை.

மேலும், அமைச்சர் என்ற உயர்ந்த பொறுப்பை வகிக்கும் எவரும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டியவர்கள். அதற்கு மாறாக, சட்டத்தை மீறுபவர் அமைச்சராக இருந்தாலும் அவர் மீது சட்டம் பாய்ந்தே ஆக வேண்டும்.

மிகப் பாரதூரமான முறையீடு ஒன்று, குறித்த அமைச்சருக்கு எதிராக தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அதனை உடனடியாக கவனத்தில் எடுத்து உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை ஜனாதிபதியும், பிரதமரும் உறுதிப்படுத்த வேண்டும் என்று கோருகின்றோம்.

மனித உரிமைகளில் நம்பிக்கை கொண்டுள்ள சகல அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புக்களும் இந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படுவதை வலியுறுத்தி குரல் கொடுக்க முன்வருவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம். - என்றுள்ளது.

# துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குச் செல்ல அனுமதித்தவருக்கு நடவடிக்கை எடுக்குக!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் வலியுறுத்து



துப்பாக்கியுடன் சிறைக்குச் செல்ல அனுமதித்தோருக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்

கல்வியங்காட்டில் அவரது இல்லத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஓர் அமைச்சர் சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் செல்வதை சிறைச்சாலை அதிகாரிகள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள். அதிகாரிகளாக இருந்தாலும் சரி சிறைச்சாலைக்குள் அங்கீகாரம் அளிக்கப்பட்டோரை தவிர அரசியல் வாதிகளோ எந்த ஓர் அதிகாரியோ எவரையும் துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குள் நுழைய அனுமதித்தமை மிகவும் தவறான விடயமாகும்.

சிறைச்சாலைகள் ஒரு விருந்தினர் விடுதி அல்ல. துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சர் தனியாக செல்லாமல் அவர் தனது நண்பர்களுடன் சென்று இருக்கின்றார்.

வெறுமனே அநுராதபுரம் மாத்திரமல்ல வெலிக்கடை சிறைக்குச் சென்றார் எனவும் அங்கு தமிழ் அரசியல் கைதிகளை மிரட்டினார் எனவும் அவர்களை முழங்காலில் இருத்தினார் எனவும் கூட ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன இவ்வாறான விடயங்கள் நடக்கின்றன என இருந்தால் நிச்சயமாக இதே மாதிரி ஒரு மோசமான சம்பவங்கள் இருக்க முடியாது.

ஆகவே இந்த அமைச்சரின் நடவடிக்கை தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட வேண்டும். இவர் அமைச்சராக இருப்பதற்குத் தகுதியற்றவர். ஆகவே இவர் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

அது தமிழ் அரசியல் கைதியாக இருக்கலாம் ஆனால் ஒரு சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் சென்று பேசுவதற்கு கூட எவருக்கும் உரிமை கிடையாது. எனவே, இந்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக் கப்பட வேண்டுமென தெரிவித்தார்.

# அரசியல் கைதிகளுக்கு எதிராகச் சித்திரவதை தொடர்ந்தால் வடக்கு - கிழக்கு கிளர்ந்தெழும்!

## சட்டத்தரணி சுகாஸ் ஆக்ரோஷம்

தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராகச் சித்திரவதைகள் தொடர்ந்தால் கொரோனாவைத் தாண்டியும் வடக்கு, கிழக்கு கிளர்ந்தெழும் எனதமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் -

சிறைச்சாலைக்குள் அடாத்தாகப் பிரவேசித்து தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தி முட்டுக்காலில் வைத்து சித்திரவதை செய்து அச்சுறுத்திய ஆளுங்கட்சி சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரின் அராஜகத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிங்களக் கட்சிகளுக்கு தமிழர் தாயகத்திலிருந்து வால் பிடிப்போர் இனி அம்மணமாகத் திரியுங்கள்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராகச் சித்திரவதைகள் தொடர்ந்தால் கொரோனாவைத் தாண்டியும் வடக்கும் கிழக்கும் கிளர்ந்தெழும். கொரோனாக் காலத்தில் யாருக்கும் தெரியாமல் அரசியல் கைதிகளில் கைவைப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. - என அவர் மேலும் தெரிவித்தார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 77

ந.வித்தியாதரன்


டி.பி.தனபால

தமிழ் நேயர்கள் மனம் கவர்ந்த மூத்த அறிவிப்பாளர் வி.என்.மதியழகன் தாம் ஊடகத்துறையின் முதல் அடியை எஸ்.டி.சிவநாயகம் ஐயாவின் வழிகாட்டுதலில் பெற்றுக்கொண்டமை பற்றிய நினைவுகளை நேற்று இப்பத்தியில் மீட்டார். அதன் எஞ்சிய பகுதியை இன்று பார்ப்போம்:-

தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடத்தில் சேர்ந்து கொள்ள நான் சுயாதீன பத்திரிகா சமாஜம் சென்றபோது மேல் மாடியில் வைத்து என்னை நேர்முகப் பரீட்சை செய்தவர் 'தவஸ' சிங்கள நாளேட்டின் பிரதம ஆசிரியர் டி.பி.தனபாலா. விவசாயம் கற்றுவிட்டு பத்திரிகை நிறுவனத்தில் சேர முற்படும் கற்றுக்குட்டியான என்னை அவர் பத்திரிகைத்துறை பற்றி எதுவும் கேட்டு தொந்தரவு செய்யவில்லை. மாறாக தமிழ்,ஆங்கில மொழி அறிவு எந்த அளவில் உள்ளது என்பதை மட்டும் அவர் அளவிட்டுக் கொண்டார்.

*"உதவி ஆசிரியராக உம்மைச் சேர்த்துக்கொள்ள முடியும். சிவநாயகத்திடம் சொல்லுகிறேன். கீழ் மாடியில் அவரைச் சந்தியும்"* என்று என்னை அனுப்பி வைத்தார்.

*"வாரும் ஐ சே"* எனக்கூறி என்னை மேலும், கீழுமாகப் பார்த்து நோட்டமிட்டவாறே பல கேள்விகளை கேட்டபின் சொன்னார் இப்படி -

*"உதவி ஆசிரியர் பதவி மிகவும் பொறுப்பானது. அதற்கு நல்ல அனுபவம் வேண்டும். அலுவலக நிருபராக உம்மை சேர்த்துக் கொள்கிறேன். காலப்போக்கில் முன்னேறலாம். இப்போது முதல் அடியை எடுத்து வையும்."*

பத்திரிகைத்துறை ஜாம்பவான் என்னைக் கரம்பற்றி ஏற்றிவிட்ட முதற்படி, அடி பிசகாமல் பலத்துடன் சில படிகளை பின்னர் கடக்க வைத்தது.


தினபதி - சிந்தாமணி ஆசிரியபீடத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு இலக்கம் அல்லது ஒரு எழுத்து அடையாளமாக இருந்தது. எனக்கு தரப்பட்ட இலக்கம் 3. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என மூன்று படிகளைக் காலவோட்டத்தில் கடந்தேன். பத்திரிகைத்துறை அனுபவம் வானொலியில் கைகொடுத்தது. வானொலியில் பெற்ற அனுபவம் தொலைக்காட்சியில் கைகொடுத்தது. பத்திரிகைத்துறையில் பயத்தைப் போக்கிட பாரிய பொறுப்புக்களைத் தந்து, தவறுகள் நேர்ந்தால் பொறுமை காட்டித் திருத்தி, பக்குவப்படுத்திய அவரது பாங்கினை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

சிவநாயகத்தின் கீழ் பயிற்சி பெற்ற காலத்தில் பல பயனுள்ள விடயங்களைக் கற்றறிந்து கொண்டேன். அவர் சொல்லித்தந்த பிரதானமான நுட்பம் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் மொழியில் உள்ள உயர் இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு என்பவற்றைத்தாண்டி மூன்றாவது வழக்கான சமகால இலக்கிய வழக்கை பயன்பாட்டு வரையறைக்கு உட்பட்டு பிரயோகிப்பது எவ்வாறு என்ற நுட்பமே அது. வாசிப்போரை, கேட்போரை சுலபமாக அது வசீகரிக்க வைக்கும். செய்திப் பத்திரிகைகளில் பயன்படுத்தப்படவல்ல சமகால வழக்கில், ஏனைய துறைகளின் பயன்பாடுகளில் இல்லாத பல மொழியியல் சிறப்புக்கள் உள்ளன என்பதை அவர் அன்று உணர்த்தி வைத்தார் படிப்படியாக.

தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடத்தில் பணி செய்து கொண்டிருக்கையிலேயே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தேன். இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் பத்திரிகைத்துறை அனுபவம், இசைத்துறையில் உயர் தகுதி என்பவற்றில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பது நிபந்தனை.

நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்தது. சிவநாயகத்தின் அலுவலகத்தினுள் தயங்கித் தயங்கி பிரவேசித்து அனுபவச் சான்றிதழ் தருமாறு கேட்டேன். கறாராக மறுத்துவிட்டார். 'இங்கேயே உம்மால் ஒரு பத்திரிகையாளனாக முன்னேற முடியும்


ஷண்

- வேறெங்கும் செல்லவேண்டாம்.' என்று கண்டிப்பான தொனியில் கூறினார்.

இராஜினாமாக் கடிதத்தை கொடுத்தே அனுபவச் சான்றிதழை அவரிடமிருந்து பெறநேரிட்டது. என்னை விரும்பும் பத்திரிகைத்துறை வல்லாளை விட்டுச் செல்கிறேனே என்ற கவலை என்னை வாட்டி எடுத்தது. பிரிய மனமில்லாமல் அவரது அலுவலக அறையை விட்டு வெளியே வந்தேன்.

வானொலியில், தொலைக்காட்சியில் இடம்பெற்ற எனது நிகழ்ச்சிகளைப் பின்னாளில் சில சந்தர்ப்பங்களில் அவர் எழுத்தில் கடுமையாக விமர்சனம் செய்ததுண்டு. மனம் விட்டுப் பாராட்டியதுமுண்டு. நான் தயாரித்து ஒலிபரப்பி வந்த நாடக மேடைப் பாடல்கள் நிகழ்ச்சி மிகவும் உயர் வானது - ரசனைக்குரியது என திரிஞானி கேள்வி - பதில் பகுதியில் அவர் எழுதியிருந்தமை மனதில் வெகுவாகப் பதிந் துள்ளது.

சிவநாயகம் தமது எண்பத்திரெண்டாவது வயதில் காலமானபோது நான் வெளிநாட்டில் இருந்தமையால் அவருக்கு நிரந்தரப் பிரியாவிடை என்னால் கொடுக்க முடியாது போய்விட்டது.

இலங்கையில் அண்மைக்காலம் வரை ஒரு முன்னணி Journalist ஆக - சுதந்திர ஊடகவியலாளராக விளங்கி வந்த அமரர் 'ஷண்' என்ற எஸ். சண்முகராசாவும் நானும் தினபதி - சிந்தாமணி ஆசிரியபீடத்தில் ஒன்றாகப் பணிபுரிந்தவர்கள். கொழும்பில் தங்கியிருந்து ஊடக எழுத்தை சுயதொழிலாக மேற்கொண்டு வந்த ஷண்ணை நான் தொடர்பு கொண்டபோது, அவரது குருவுமான சிவநாயகத்தின் அருமை, பெருமைகளை அவர் கூறிய விதம் இது:-

1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி ரூபவாஹினியின் உத்தியோகபூர்வ ஒளிபரப்பு ஆரம்பமானபோது, அன்றைய நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த நான், அந்நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு விமர்சனம் எழுதி ஆசிரியரிடம் கொடுத்தேன். அதை அவர் தனது அத்தாணி மண்டபம் பகுதியிலே பிரசுரித்தார்.

மறுநாள் என்னை அழைத்த ஆசிரியர், அவ்விமர்சனத்துக்கான பாராட்டைத் தெரிவித்து விட்டு, 'சினிமாவை விட சக்தி வாய்ந்த ஊடகம் ரெலிவிஷன். சினிமா படங்களை தியேட்டர்களுக்குப் போனால் தான் பார்க்க முடியும். ஆனால் ரெலிவின் நிகழ்ச்சிகளையோ முழுக்குடும்பமுமே வீட்டிலிருந்தபடி பார்க்கலாம்.'

'உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள், நேரடி நிகழ்ச்சிகள், ரெலி டிராமாக்கள், நாட்டிய நிகழ்ச்சிகள், சங்கீதக் கச்சேரிகள், சினிமாப் படங்கள், பாடல் காட்சிகள் என்று எல்லாவற்றையுமே ரெலிவிஷனில் பார்க்கலாம்.

'ஆகவே சினிமாவுக்கென்று ஒரு பகுதி சிந்தாமணியில் வெளிவருவது போல் ரெலிவிஷனுக்கும் ஒரு பகுதி ஆரம்பித்தால் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பிருக்கும். ஆகவே அப்படி ஒரு பக்கம் தொடங்கு வோமா?'

'அப்படித் தொடங்கினால், அப்பக்கத்தில் தொலைக்காட்சியில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனங்களை எல்லாம் எழுதலாம்' என்று சொல்லி எனது அபிப்பிராயத்தைக் கேட்டார். நானும் அதற்குச் சம்மதம் தெரிவித்தேன். அன்று உதயமானதுதான் இலங்கைப் பத்திரிகை உலகின் முதல் 'ஒலி ஒளிப் பக்கம். ஒலி என்றால் வானொலி (BROADCASTING) ஒளி என்றால் ஒளிபரப்பு (TELECASTING) என்பது அதன் அர்த்தமாகும். ஆனால், ஆசிரியரோ அந்த 'ஒலி ஒளி'யுடன் 'உருவம்' என்ற சொல்லையும் சேர்த்து, அந்தப் பக்கத்துக்கு 'ஒலி ஒளி உருவம்' என்று பெயர் சூட்டினார்.

இந்த 'ஒலி ஒளி' ஊடகங்களுக்குள் உன்னதமான கலைஞர்களும், ஊடகவியலாளர்களும் உலா வருகின்றார்கள் என்பதை உணர்த்தவே 'உருவம்' என்ற சொல்லையும் சேர்த்து அத்தலைப்புக்கு உயிரூட்டினார்.

'ஒலி ஒளி உருவம்' பக்கத்தின் தயாரிப்புப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டதால், எனது பெயரின் முதலிரு எழுத்துக்களையே புனைபெயராகக் கொண்டு அப்பக்கத்துக்கான ஆக்கங்களை எழுத ஆரம்பித்தேன்.

ஆனால் ஆசிரியரோ, 'இன்னொரு


வி.என்.மதியழகன்

நல்ல பெயர் உள்ளது. அதுதான் இந்த ஒலி ஒளி உருவப் பகுதிக்குப் பொருத்தமானது என்று கூறி 'சஞ்ஜயன்' என்ற பெயரைச் சூட்டினார். இந்த 'சஞ்ஜயன்' என்ற பெயரின் முதல் எழுத்திலும் கடைசி எழுத்திலும் உமது புனைபெயரின் தொனியும் அடக்கம் என்றார்.

'இந்தச் சஞ்ஜயன் யார் என்று தெரியுமா?' என்றும் கேட்டார். 'பாரத கதையில் வரும் ஒரு கதாபாத்திரத்தின் பெயர்' என்று



கூறினேன்.

'ஆம்! அவர்தான் வியாசரின் சீடர். பாரத குருஷேத்திரப் போர்க்காட்சிகளை தனது ஞானதிருஷ்டியால் பார்த்து, அரண்மனையிலிருந்தபடியே திருதராஷ்டிரனுக்கு நேரடி ஒலி, ஒளி பரப்புச் செய்த ஞானி அன்றைய புராண காலத்து 'புரோட்காஸ்டர் அன்ட் டெலிகாஸ்டர்' இவர்தான். - என்று விளக்கமளித்தார் ஷண்.

சிந்தாமணியில் வெளிவந்த 'ஒலி ஒளி உருவம்' பக்கம், இலங்கையின் கலைத்துறையைச்சார்ந்தவர்களாலும், வானொலி, தொலைக்காட்சிக் கலைஞர்களாலும் சிந்தாமணி வாசகர்களாலும் பெரிதும் பாராட்டி வரவேற்கப்பட்ட ஒரு பகுதியாகும்.

நாடகம், நாட்டியம், சங்கீதம், ரெலிடிராமாக்களின் நிறை குறைகளை எல்லாம் அச்சமின்றி, துணிச்சலான விமர்சனங்கள் மூலம் சுட்டிக் காட்டி கலைஞர்களின் முன்னேற்றத்துக்கு வழி வகுத்த பகுதிதான் 'ஒலி ஒளி உருவம்' என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்குப் பின்னணியில் இருந்து ஊக்குவித்தவர்தான் ஆசிரியர் எஸ்.டி.எஸ். அவர்கள்.

அன்று சிந்தாமணியில் அவர் ஆரம்பித்து வைத்த அந்த 'ஒலி ஒளி உருவம்' பகுதிதான், இன்றைய சில தமிழ்ப் பத்திரிகைகளிலும் 'ஒலி ஒளி' என்பதை ஆரம்ப அடிகளாகக் கொண்டு பல்வேறு பெயர்களிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

அந்த நாள் ஞாபகத்தில் ஊடகவியலாளர்களாலும், வாசகர்களாலும் என்றுமே மறக்கமுடியாதவர்தான், நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் பத்திரிகையுலக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் மூலம் தமிழன்னைக்கு முடிசூட்டி மகிழும், கிழக்கு மாகாணம் மருதமுனையைச் சேர்ந்த கவிஞர் அஹமெத் ஜின்னாஹ் ஷெரிபுத்தீன் நாவற்குழியூர் நடராஜன் நினைவாக அகில இலங்கை ரீதியாக வானொலியில் நாம் நடத்திய கவிதைப்போட்டி உட்பட 18 கவிதைப் போட்டிகளில் முதற் பரிசு பெற்றவர். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். பண்டாரவன்னியன் காவியம் பாடியவர். சிவநாயகத்தின் மறைவினால் துவண்டுபோன ஜின்னாஹ் 'ஒரு ஆலமரம் அடிசாய்ந்தது' என்ற மகுடத்தில் பாடிய கவிதாஞ்சலி படிப்பவர் மனதைத் தொட்டு நிற்கும்.

இலங்கை பத்திரிகையுலகின் வரலாற்றில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஞானச்செருக்கு மிக்க 'ராங்கிக்கார ஜென்ரில்மென்' சிவநாயகத்தின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்.

- இப்படி தமது நன்றியுணர்வுடனான மனப் பதிவை எழுத்தில் வரைந்திருக்கின்றார் நம் அனைவரதும் அபிமானத்துக்குரிய மூத்த அறிவிப்பாளர் வி.என்.மதியழகன்.

(வளரும்.....)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 132



**358. நாடு கடந்த தமிழீழ அரசு அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது?**

முதலாவது சுதந்திர தமிழீழத் தாகத்தை, அபிலாஷையை, முன்னெடுத்து, சுதந்திர இறைமையுள்ள தமிழீழத்தை அமைப்பதுதான் அதன் பிரதான நோக்கம். விடுதலைப் புலிகள் வன்முறைகளுடன் முன்னெடுத்ததைப் போரின் பின்னர் வன்முறையற்ற வழிகளில் சர்வதேச மட்டத்தில் அதனை அவர்களின் அனுசரணையோடு வட கிழக்கு பகுதிகளில் அமைப்பது என்றும், வன்முறையற்ற முறையில் அதனை நடைமுறைப்படுத்த தமிழருக்கெதிரான மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானமற்ற செயல்பாடுகள், இனப் படுகொலை, அட்டூழியங்கள் போன்றவற்றை சர்வதேசத்திற்கு எடுத்துரைத்து அதன் வழியில் ஆதரவை தேடுதல் என்னும் நோக்கங்களைக் கொண்டது.


இன்னும் ஒரு விதத்தில் சிங்கள மக்கள் ஸ்ரீலங்கா என்ற ஓர் அரசுக்கு உரித்தானவர்களாக இருந்தார்கள். ஆகவே, அவர்களுக்காக அந்த அரசு தனக்கிருக்கும் கட்டமைப்புக்களின் ஊடாக ஒவ்வொரு நாட்டிலும் அலுவலக ரீதியாகப் பரப்புரைகள் செய்ய வசதிகள் பெறுகிறார்கள்.

அதே சமயம் காலத்துக்கு காலம், தருணத்திற்கு தருணம், சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்க கூடிய விதத்தில் முடிவுகளை எடுத்து, அதற்குச் சாதகமாகச் செயல்படத் தங்களுடைய கட்டமைப்புக்களை முடுக்கி விடுகிறார்கள். ஆனால் அரசு தரப்பு என்று ஒன்று இல்லாத தமிழ் மக்கள், அதுவும் புலம் பெயர்ந்து சிறுசிறு கூட்டங்களாக இருந்து கொண்டு, அப்படியான கட்டமைப்புக்களையும் உருவாக்காத நிலையிலும், வழிவகைகள் இல்லாததாலும், இப்படியான ஒரு அரசை நாடு கடந்த தமிழீழ அரசாக அமைத்து, எல்லோரையும் ஒருங்கிணைத்துச் செயல்பட எடுத்த முயற்சி. இதில் ஏற்படுத்தக்கூடிய கட்டமைப்புக்களினால் ஸ்ரீலங்கா அரசால் செய்யப்படுபவைகளை எதிர்கொள்ளலாம் என்ற சிந்தனை கூட.

அதே சமயம் விடுதலைப் புலிகளால் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட நிழல் அரசுக்கு ஒரு சர்வதேச வடிவம் அமைவதாகவும் பார்க்கப்பட்டது.

**359. யுத்த முடிவின் பின்னால் இப்படியான ஒரு தோற்றத்தை இந்தியாவும் சர்வதேசமும் எப்படிப் பார்த்தன?**

யுத்தத்தின் பின்பு மட்டுமல்ல, எப்பொழுதுமே முக்கியமாகத் திம்பு பேச்சுவார்த்தைகளின் போதே, இந்தியா மிகத் தெளிவாக சுதந்திரத் தமிழீழத்தைத் தாங்கள் ஆதரிக்க முடியாது என்று தெரிவித்திருந்தது. ஆகவே போரில் இந்தியா அதற்கு ஆதரவு கொடுத்து, இந்தியக் கடற்பரப்பில் தங்களது மேலாதிக்கத்துக்குள் உட்பட விரும்பாது மீறி இயங்க விரும்பிய விடுதலைப் புலிகளை அழிப்பதில் தயக்கம் காட்டவில்லை. போரின் முடிவு இந்தியாவின் நிலைப்பாட்டை அரசியல் ரீதியில் மாற்றவில்லை. ஆனால் மற்ற மேல்நாட்டு சர்வதேசங்கள் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் தங்களது ஆதாயங்களுக்காகவும் இந்தியப் கடற்பரப்பின் வசதிகளுக்காகவும் ஸ்ரீலங்காவிற்கு துணைபோகிறார்கள். அவர்களது நாடுகளில் ஜனநாயக ரீதியில் தனிநாட்டு கோரிக்கைகளுக்கு கோஷம் போடலாம். ஆதலால் தான் அமெரிக்காவில் கூட உருத்திரகுமாரன் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமராக இருப்பதையோ அல்லது சுதந்திர தமிழீழம் கோருவதையோ அரசியல் ரீதியாகத் தடுக்கவில்லை. ஆனால் அவர் ஒரு பயங்கரவாத அமைப்பாக கருதப்பட்ட விடுதலைப் புலிகள் செயற்பட பணம்,ஆயுதம், புத்திமதி போன்ற உதவிகள் செய்வதை அனுமதிக்காது.



Tamil Eelam Freedom Charter

ஆகவே இந்த அரசின் தோற்றம் தமிழ் மக்கள் இந்தியாவை பொறுத்தளவில் 'நீங்கள் எங்கள் தோற்றங்களை, உடம்புகளை அழிக்கலாம், ஆனால் தமிழீழம் என்ற எங்களது ஆன்மாவை அழிக்க முடியாது. அதற்கான எங்களது உறுதியை அடக்க முடியாது' என்று சொல்லியது.

அதன் பின் அந்த உறுதியை அடைய அதன் பின்னணிகளும் அதற்கான கட்டுப்பாடுகளும் தேவையான ஒருமுகமான ஆதரவுகளும் இன்றி பல விதமான அணுகுமுறைகளும், தீர்வை நம்பி தமிழர்களிடையே எழுந்ததால், இதற்காக செய்யப்பட்ட காலமும் பணவிரயங்களும் எதிர்பார்த்த பலனைத் தந்தனவா என்ற பல எதிர்மறைகளை எழுப்பின.

**360. என்ன காரணங்கள்?**

தமிழ் மக்களின் உரிமை, விடுதலைப் போராட்டங்கள் என்பன இப்படியான ஒற்றுமையற்ற, தூர நோக்கற்ற, உறுதிப்பாடுகள் கொள்ளாத சோக வரலாறுதான்.

விடுதலைப் புலிகள் தாங்கள்தான் ஏகோபித்த தலைவர்கள் ஆவதற்கும், ஆனபின் சுதந்திர தமிழீழம் அமைப்பதுதான் தங்களது இலட்சியம், அதுவரை, அதற்காகப் போராடுவோம், அதை மக்கள் ஏற்க வேண்டும் என்றதால், மக்கள் அவர்கள் போராடுவதைப் பார்த்து அதனால் அவலப்பட்டாலும் அதனை ஏற்று பொறுத்தமைக்கு சிங்கள அரசுகளின் அடக்குமுறைகளில் இருந்து தாங்கள் விடுபடவேண்டும் என்ற அவாவே காரணம். சிங்கள அரசுக்கும் தங்களுக்குமிடையே ஒரு பலம் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என விரும்பினர்.

அதன் பின்னர் இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு, இந்தியப் படைகள் வந்த போது, அவர்கள் ஒருவித நிம்மதிப் பெருமூச்சை விட்டனர். அதனை வரவேற்றனர். இந்தியாவை நம்பி தமிழ் மக்களின் பாதுகாப்பை ஒப்படைத்து, ஆயுதங்களை கையளிப்போம் என சுதுமலை அம்மன் முன்றலில் பிரபாகரன் சொன்ன போது எழுந்த கைதட்டல்கள் அதனை ஆமோதிப்பனவாக இருந்தன.




(12ஆம் பக்கம் பார்க்க)

# இராஜாங்க அமைச்சரின் சிறை அச்சுறுத்தலை உறுதிப்படுத்துவேன் என்கிறார் கஜேந்திரகுமார்



அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை மண்டியிடச்செய்து, துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தினார் என்பதை தன்னால் உறுதிப்படுத்தமுடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் டுவிட்டரில் மேலும் பதிவிட்டுள்ளவை வருமாறு –

செப்டெம்பர் 12 ஆம் திகதி மாலை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை அவருக்கு முன்னால் மண்டியிட வைத்தார் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

இராஜாங்க அமைச்சர் அவர்களை நோக்கி தனது தனிப்பட்ட துப்பாக்கியைக் காட்டி அவர்களை அந்த இடத்திலேயே கொன்றுவிடுவேன் என மிரட்டினார்.

இராஜாங்க அமைச்சரின் இந்த மோசமான நடத்தையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகக் கடுமையான முறையில் கண்டிக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகள் ஏற்கனவே உலகிற்குத் தெரிந்த மிகக் கடுமையான சட்டங்களில் ஒன்றான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டமையால் அதிர்ச்சியடைந்தனர். இன்னும் மோசமாக அவர்கள் பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிலர் பத்தாண்டுக்கும் மேலாக அவர்களுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லாமல் மற்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படாமல் தடுப்பில் உள்ளனர்.

அவர்களின் விவகாரங்களைக் கவனிக்க வேண்டிய இராஜாங்க அமைச்சர் அவர்களைக் கொல்வேன் என அச்சுறுத்துவது அவர்களின் அச்சத்தை மேலும் மோசமாக்க முடியாது.

அமைச்சரை உடனடியாக பதவி விலகச் செய்ய வேண்டும் மற்றும் அவரிடமிருந்து அனைத்து பதவிகளையும் பறிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்துகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை பயனற்ற தன்மையைப் புரிந்துகொள்ளவும், பொறுப்புக்கூறலைத் தவிர்க்கும் கலையில் தேர்ச்சி பெற்ற ஒரு தயக்கமில்லாத அடங்காத அரசை ஒரு நிறுவனத்துக்குள் இலங்கையைக் கொண்டிருப்பதை அங்கத்துவ நாடுகளுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சுட்டிக்காட்டுகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பார்வை இலங்கை மீது இருக்கும் போது ஓர் அமைச்சர் இப்படி நடந்து கொள்ள முடியும் என்பது, மனித உரிமைகள் சபையைப் பொறுத்தவரையில் அரசு எவ்வளவு கவலைப்படாமல் உள்ளது என்பதை மட்டுமே காட்டுகிறது.

இலங்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அப்பால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு அவசரமாக எடுத்துச் செல்லாவிட்டால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலை இன்னும் மோசமடையும் என்றுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தை மதுபோதையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்து தமிழ் அரசியல் கைதிகளை அவமானப்படுத்தி தண்டிக்க முயன்றார் என செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்துள்ளார். வெலிக்கடை சிறைச்சாலைக்குள் மதுபோதையில் தனது நண்பர்களுடன் பலவந்தமாக உள்ளே நுழைந்த இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தை அநுராதபுரம் சிறைச்சாலைக்குள்ளும் அதேபோன்று நுழைந்துள்ளார்.

இலங்கையின் அரசியல் செல்வாக்கு மிக்க குடும்பத்தைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் நபர்களை தனக்கு முன்னாள் முழங்காலில் இருக்கசெய்து அவர்களை தண்டிக்க முயன்றார் .

அவர் அவ்வேளையில் மதுபோதையில் காணப்பட்டார் எனவும் ஹெலிக்கொப்டரிலேயே அவர் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# சி.சி.டி.வி. ஆதாரங்களை அழிப்பதற்கு முன் விசாரணைகள் நடத்தப்படல் வேண்டும்

## மனித உரிமை முன்னாள் ஆணையர் அம்பிகா வலியுறுத்தல்

மதுபோதையில் அமைச்சர் சிறைச்சாலைக்குள் நுழைந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த சம்பவங்களின் போது சி.சி.டி.வி. ஆதாரங்களை உடனடியாக சேதப்படுத்துதல் அல்லது அழிக்கும் செயற்பாட்டை உடனடியாகத் தடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு சராசரி குடிமகன் இந்தச் செயலைச் செய்திருந்தால், அவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலிடப்பட்டிருப்பர் என்பதையும் அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டினார். செல்வாக்கு மிக்க இராஜாங்க அமைச்சர் ஒருவர் தனது நண்பர்களுடன் மது போதையில், வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நுழைந்து சிறை மற்றும் தூக்கு மேடைக்குச்



சென்றனர் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இதேவேளை குடிபோதையில் இருந்த இராஜாங்க அமைச்சர் கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளை துப்பாக்கி முனையில் மண்டியிடச் செய்து குழப்பத்தை ஏற்படுத்தினார் என்ற செய்தியும் வெளியாகிய நிலையில் அம்பிகா சற்குணநாதன் இதனைத் தெரிவித்துள்ளார்.

# பௌத்தம் பற்றி வகுப்பெடுக்கும் அரசின் வக்கிர மனசு இதுவா?

## பதிலளிக்க ஜனாதிபதி கடமைப்பட்டுள்ளார் என மனோ காட்டம்

ஓர் இராஜாங்க அமைச்சர் அநு ராதபுர சிறைக்குச் சென்று, துப்பாக்கி முனையில், தமிழ்க் கைதிகளை முழந்தாளிடச் செய்து அவமானப்படுத்தி, பயமுறுத்தி உள்ளார். இதொரு பாரிய மனித உரிமை மீறல், மனிதர்களின் ஆத்ம கௌரவத்தை அவமானப்படுத்தும் ஒரு செயல், ஒரு கிரிமினல் செயல். பௌத்தம் பற்றி நாட்டுக்கு தினந்தோறும் வகுப்பெடுக்கும் இந்த அரசாங்கத்தின் மிக வக்கிரமான இனவாத மனசை இது காட்டுகிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதற்கு பதில் கூற வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி – தமிழ்



முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தனது டுவிட்டர், முகநூல் தளங்களில் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு குருதி சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டது

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 16 லட்சம் ரூபா பெறுமதியான குருதி சுத்திகரிப்பு இயந்திரமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்பளிப்பு செய்யப்பட்டது.

மாவட்டம் 306பி 1, மோதர – மட்டக்குளிய லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

மோதர– மட்டக்குளிய லயன்ஸ் கழகத்தின் உறுப்பினரும் வங்கியின் நிர்வாக இயக்குநருமாகிய லயன் எஸ்.ரெங்கநாதனின் வேண்டுகோளுக்கிணங்க கனடாவில் வசிக்கும் மருத்துவர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் இந்த குருதி சுத்திகரிப்பு இயந்திரம் மாவட்ட வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 306பி 1 இன் மாவட்ட ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமார் அவரது துணைவியார் லயன் மேரியன், மாவட்ட இரண்டாவது மாவட்ட உப ஆளுநர் லயன் பிளஸிடஸ் பீட்டர், துணைவியார் லயன் சாவித்திரி, ஆளுநர் சபை மாவட்ட பிரதி செயலாளர், ஆளுநர் சபை மாவட்ட பிரதி பொருளாளர் லயன் சந்திரசேகர் மற்றும் மட்டக்குளிய லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள், வைத்தியசாலை வைத்தியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



மோதர – மட்டக்குளிய லயன்ஸ் கழக உறுப்பினரும் ஆளுநரின் ஆலோசகரும் கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநருமாகிய லயன் எஸ்.ரெங்கநாதன், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சுகாதார இடர்பாடுகள் கருதி தீவின் முழுப் பிராந்தியத்துக்கும் கொமர்ஷல் வங்கி ஊடாகவும் லயன்ஸ் கழகத்தின் ஊடாகவும் தனது தனிப்பட்ட சுகாதாரத் துறையில் பாரியளவிலான பங்களிப்பை ஆற்றிவருகின்றார். எமது வடபகுதியிலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளுக்கும் இவர் பல மருத்துவ உதவித் திட்டங்களை ஆற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**இன்று செப்டெம்பர் 16**
**சர்வதேச ஓசோன் தினம்**




# பூமியின் பாதுகாப்புக் கவசமான ஓசோன் படலத்தைக் காப்போம்



**கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா**
**(சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**புவியியற்றுறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்)**

சூரிய ஒளிப்பிளம்பின் ஒரு பகுதியான புறஊதாக் கதிர்வீச்சை தடுத்து நிறுத்தி புவியைக் காத்து வரும் வளையமே ஓசோன் (ozone) படலமாகும். அதாவது நமது பூமியை போர்த்தி இருக்கும் ஒரு மெல்லிய வாயுப்படலமே ஓசோன் படலமாகும். கடல் மட்டத்தில் இருந்து 20 கிலோமீற்றர் தொடக்கம் 50 கிலோமீற்றர் வரை உள்ள பகுதியில் தான் ஓசோன் உள்ளது. ஓசோன் என்பது மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்திருக்கும் ஒரு மூலக்கூறாகும். இது வளிமண்டலத்தின் மேல், வாயு நிலையில் காணப்படுகின்றது. இது ஈரணு ஒட்சிசன் மூலக்கூறு போல் நிலையான தன்மை இல்லாதது. இலகுவாக சிதைந்து விடும் தன்மை கொண்டது. 1840ஆம் ஆண்டு சி.எப்.ஸ்கோன்பின் (Christian Friedrich Schonbein) என்பவர் ஓசோனைக் கண்டுபிடித்தார். படை மண்டலத்தின் கீழ்ப்பகுதியில் ஒளி - இரசாயன செயற்பாடு காரணமாக ஓசோன் வாயு உருவாகிறது. இதன் உருவாக்கத்திற்கு தனித்த ஒட்சிசன் அணுமூலக் கூறுகள் அவசியமாகும். படைமண்டலத்தில் ஒட்சிசன் வாயு மூலக்கூறுகளுடனான புறஊதாக் கதிர்களின் தாக்கத்தினால் ஒட்சிசன் அணுமூலக்கூறுகள் உருவாகின்றன. இந்த ஒட்சிசன் அணுமூலக்கூறானது உயர் வெப்பநிலை, அமுக்க நிலைமை காணப்படும் போது ஒட்சிசன் வாயு மூலக்கூறுகளுடன் இணைந்து ஓசோனாகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் ஓசோன் மூலக்கூறு நிலையானதல்ல. இது மோதுகை, ஒளி பிரிகையாக்கம் ஆகிய செயற்பாடுகளினால் சிதைக்கப்படும். அந்தாட்டிக்கா பனிக்கண்டத்தில் ஓசோன் அளவு பருவநிலைக்கேற்ப சிறிய அளவிலான மாறுதலுடன் சராசரியாக நிலவுகிறது. ஆனால் வசந்த காலத்தில் (ஓகஸ்ட், நவம்பர்) ஓசோன் அளவு சராசரி அளவில் 50 வீதம் முதல் 60 வீதம் வரை குறைந்து காணப்படுகின்றது. இந்த ஓசோன் குறைவே 'ஓசோன் துவாரம்' (ozone hole) என்று அழைக்கப்படுகிறது. அதாவது வளிமண்டலத்தில் உள்ள மற்ற இடங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு ஓசோன் படலத்தின் அடர்த்தி குறைந்து காணப்படும் நிலை ஆகும். உண்மையில் இது துவாரம் இல்லை. இயற்கையில் ஓசோன் உருவாகும் அளவும், சிதைக்கப்படும் அளவும் சமமாக இருக்கும் போது வளிமண்டலத்தில் ஓசோனில் எந்தவிதப் பாதிப்பும் இல்லை. ஆனால் மனித செயற்பாட்டால் அதிக அளவில் ஓசோன் சிதைக்கப்படுவதால் ஓசோனில் துவாரம் ஏற்படுகிறது. 1980ஆம் ஆண்டில் அந்தாட்டிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஓசோன் துவாரம் மற்ற இடங்களுடன் ஒப்பிடுகையில் 30 வீதம் குறைந்து காணப்பட்டது.

இந்த வகையில் சர்வதேச ஓசோன் தினம் பற்றியும், ஓசோன் படலம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது? என்பது பற்றியும், ஓசோன் படலம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள் பற்றியும், ஓசோன் படலம் மாசுபடுவதை தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

### வளிமண்டலத்தில் ஓசோன் படலத்தின் அமைவிடம்

ஓசோன் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஓசோனைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 16ஆம் திகதியை சர்வதேச ஓசோன் தினமாகக் கொண்டாடுகின்றது. சர்வதேச ஓசோன் தினத்துடன் இணைக்கப்பட்ட மிக முக்கியமான நிகழ்வு 1987இல் நடைபெற்ற மொன்றியல் மாநாட்டு ஒப்பந்தமாகும். இது ஐக்கிய நாடுகளின் 24இற்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளின் பாரிய ஒத்துழைப்பாகும். வளிமண்டலத்தில் ஓசோன் அடுக்கு குறைவதற்கு காரணமான குளோரோபு ளோரோ காபன்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கூறுகளின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஓசோன் அடுக்கைப் பாதுகாப்பதற்காக அவர்கள் ஒன்றாக




கையெழுத்திட்டு உறுதியளித்தனர்.

சர்வதேச ஓசோன் தினம் முதன்முதலில் செப்டெம்பர் 16ஆம் திகதி 1995ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. 1987இல் மொன்றியல் நெறிமுறை கையெழுத்திட்ட போதிலும் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை நிறுவும் நாள் 1995இல் நிகழ்ந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளை (theme) அடிப்படையாகக் கொண்டு சர்வதேச ஓசோன் தினம்



கொண்டாடப்படுகின்றது. அந்தவகையில் இந்த ஆண்டு (2021) சர்வதேச ஓசோன் தினத்தின் தொனிப்பொருளாக 'வாழ்க்கைக்கான ஓசோன்: ஓசோன் அடுக்குப் பாதுகாப்பு 36 ஆண்டுகள்' (ozone for life: 36 years of ozone layer protection) என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஓசோன் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் பிரதான நோக்கமாகும்.

### ஓசோன் படலம் எவ்வாறு பாதிப்பிற்குள்ளாகிறது?

ஓசோன் படலம் பாதிக்கப்படுவதற்கு நாம் பயன்படுத்தும் இரசாயனப் பொருள்களே முக்கிய காரணமாகும். குறிப்பாக குளோரோபுளோரோ காபன் எனும் குளிரூட்டிப் பொருளே ஓசோனைச் சிதைத்து அதன் அளவைக் குறைப்பதில் முதல் இடத்தில் உள்ளது. குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள், புகையிலைத் தொழிற்சாலைகள், தீயணைப்புக் கருவிகள், வர்ணம் அடிக்கும் பொருள்கள் போன்றவற்றில் குளோரோபு ளோரோ காபன் எனும் வாயு பயன்படுத்தப்படுகிறது. இந்த வாயு வளிமண்டலத்திலுள்ள ஓசோன் துகள்களைத் தாக்குகிறது. இதனால் ஓசோன் படலத்தில் துவாரங்கள் ஏற்படுகின்றன.

குளோரோபுளோரோ காபன் நிலைத்த நிலையில் நூறு ஆண்டுகள் வரையில் இருக்கும். ஆனால் சூரியக் கதிர்கள் இவ்வாயுவின் மீது படும்போது இது பிரிகிறது. இந்த இரசாயன மாற்றத்தால் ஒரு குளோரின் அணு மட்டும் பிரிந்து ஓசோன் துகளைத் தாக்குகிறது. ஒரு குளோரோபுளோரோ மூலக்கூறு ஆயிரம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைக்கக் கூடியது. அதனால் இதனை 'ஓசோன் கொல்லி' என அழைக்கிறார்கள்.

(09ஆம் பக்கம் பார்க்க)


# பூமியின் பாதுகாப்புக் கவசமான ஓசோன் படலத்தைக் காப்போம்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)



### ஓசோன் படலம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள்

ஓசோன் அளவு குறைந்தால் அல்லது பாதிக்கப் பட்டால் பூமியின் வெப்பம் உயரும். துருவப்பகுதி களில் பனிஉருகி கடலின் நீர்மட்டம் உயரும். தாழ் வான பகுதிகள் நீரில் மூழ்கும். ஓசோன் படலத்தில் ஏற்படும் துவாரங்கள் வழியே பூமியை வந்தடை யும் புறஊதாக் கதிர்கள் காலநிலையியல் மாற்றத்தை ஏற்படுத்தும். இக்கதிர்வீச்சு கண்நோய்கள், பார்வை இழப்பு, நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்தல், தோல் புற்றுநோய் போன்றவற்றை ஏற்படுத்தும். இக்கதிர் கள் கடல் உணவுச் சங்கிலியில் முதலிடத்தில் உள்ள 'பிளாங்ரன' என்னும் மிதவை உயிரினங்களை எளிதில் கொல்லும். இவை அழிவதால் ஏனைய கடல் உயிரிகள் இல்லாமல் போகும் அபாயம் உரு வாகும். பூமியிலுள்ள அனைத்துத் தாவரங்களிலும் பச்சையங்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் இல்லாமல் தாவர இனமே அழிவைச் சந்தித்து விடும். நீர் மற் றும் நிலத்தில் வாழும் விலங்குகள் இறக்க நேரிடும். இதனால் புவியில் உணவுச் சங்கிலி பாதிக்கப்படும். ஓசோன் படலம் பாதிக்கப்படுவதால் புவி வெப்பநிலை யானது அதிதூர இடைவெளியில் விரிவடைந்து சென் றால் சமுத்திரங்களின் நீர்மட்டம் உயர்வடையும். 2030ஆம் ஆண்டளவில் **1.4⁰c - 4.5⁰c** வரை புவி




யின் வெப்பநிலை உயரும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. அதாவது புவிவெப்பநிலை **1.4⁰c - 4.5⁰c** ஆக அதிகரித்தால் கடல்மட்ட உயர்வு **20cm-65cm** வரை உயர்வடையலாம். இவ்வாறு கடல்மட்டம் உயர்வ தற்குக் காரணம் துருவப் பகுதிகளில் உள்ள பனிப் படலங்கள் அதிகரித்த வெப்பநிலை காரணமாக உருகி கடலை அடைகின்றமையாகும். அதனால் கடல்மட்டம் உயர்வடைகின்றது. **IPCC** இன் கணிப் பீட்டின்படி 2030ஆம் ஆண்டில் **20cm** உம் 2100ஆம் ஆண்டில் **65cm** உம் கடல்மட்டம் உயரலாம். பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றமானது ஒரு ஸ்திரநிலையை அடைந்த பின்பும் கூட இந்த கடல் மட்ட உயர்வு ஒரு குறிப்பிட்ட காலம் வரை இடம் பெற்றுக் கொண்டே இருக்கும். உலகில் மூன்றி லொரு பகுதி மக்கள் கடற்கரையிலிருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் வாழ்கின்றனர். கடல்மட்ட உயர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள், பழக்க வழக்கங்கள், குடியிருப்புக்கள், கைத்தொழில், விவ சாயம் என்பவற்றில் பாரியளவான தாக்கத்தை ஏற் படுத்தும். அத்துடன் இக்கடல் மட்ட உயர்வினால் சில நாடுகளின் நகரங்கள், துறைமுகங்கள், மாகா ணங்கள் என்பன பாதிப்படையலாம். உதாரண மாக நெதர்லாந்து, பங்களாதேஷ், மாலைதீவு, கனடா வின் கரையோர மாகாணங்கள். அத்துடன் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள 21 சிறிய தீவுகள் இக்கடல் மட்ட உயர்வு காரணமாக பல பிரச்சினைகளை எதிர்நோக்கலாம்.

### ஓசோன் படலம் மாசுபடுவதை தடுப்பதற்கான வழிமுறைகள்

உலகளாவிய ரீதியில் ஓசோன் படலம் பாதிக்கப்ப டுவதால் ஏற்படும் பிரச்சினைகளை கட்டுப்படுத்த உலக அளவில் ஒட்டுமொத்தமான கூட்டுறவு முயற்சி யும் ஒருங்கிணைப்பும், ஒத்துழைப்பும் மேற்கொள்ள பரவலான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. குளோ ரோபுளோரோ காபனை வெளிவிடும் சாதனங்களை தடைசெய்ய வேண்டும். அதற்குப் பதிலாக மாற்று சாதனங்களை கண்டுபிடிக்க வேண்டும். குளிர்சாத னப்பெட்டிகள், குளிரூட்டிகள் ஆகியவற்றில் குளோ ரோபுளோரோ காபனுக்கு ஈடான சுற்றுச் சூழலை மாசு அடையச்செய்யாத வேறு பொருள்களை பயன்படுத்த வேண்டும். அதாவது குளோ ரோபுளோரோ காபன்களுக்குப் (CFC) பதி லாக ஹைட்ரோ குளோரோபுளோரோ காபன்கள் (HCFC), ஹைட்ரோ ப்ளுரோ காபன்கள் (HFC), ஹைட்ரோ காபன்களான பியூட்டேன் புரோபேன் போன்றவற்றையும் அமோனியா,நீர்மற்றும்நீராவிபோன்றவையை மாற்றுப் பொருள்களாகவும் பயன்படுத்த லாம். ஓசோன் படலத்தைப் பாதிக்கும் பொருள் களை உற்பத்தி செய்வதைத் தடைசெய்ய கடுமையான சட்டங்களைக் கொண்டு வர வேண்டும். குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள் போன்றவற்றின் பயன்பாட்டை வெகுவாகக் குறைக்கலாம். மிக முக்கியமாக புவி யில் அதிகமாக மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் ஓசோன் படல இழப்பைக் குறைக்கலாம். பிளாஸ்டிக் தொழிற்சாலைகளை முற்றிலும் ஒழிக்க வேண்டும். மண்ணை சிறிது சிறிதாக செயலிழக்கச் செய்யும் பிளாஸ்டிக், பொலித்தீன் ஆகியவற்றின் பயன்பாட் டைத் தவிர்க்க வேண்டும். தற்போது பருவநிலை மாறுகிறது. இதன் காரணம் ஓசோன் படலமும், புவி வெப்பமயமாதலுமே ஆகும். மரத்தை வெட்டி, காடு களை அழித்து புவிவெப்பமாதலுக்கு வழிவகுக்கின் றனர். மரங்களை அதிக அள வில் வளர்த்து காடுகளைப் பாது காத்தால் புவிவெப்பமயமா தலை தடுப்பதோடு வளிமண் டலத்தையும் பாதுகாக்கலாம்.

1950களிலேயே ஓசோன் பற்றிய தகவல்கள் பெறப்பட்டா லும், தொலையுணர்வு அறி வின் உதவியுடன் கூடிய ஆழ மான ஒப்பீட்டு ரீதியான ஆய் வுகள் 1980களின் பின்னரே ஆரம்பித்தன. சிட்னி சப்மன் என்ற விஞ்ஞானி ஓசோன் அறிவு பற்றி முதலில் ஆராய்ந் தார். உலக வளிமண்டலவி யல் திணைக்களம் கடந்த பல வருடங்களாக வளிமண்டல ஓசோன் பற்றிய அளவீடு களையும், ஆராய்ச்சிகளையும் நடாத்தி வருகிறது. 1989ஆம் ஆண்டு ஒகஸ்ட்டில் ஐரோப்பிய பொருளா தாரக் கூட்டு நாடுகளுடன் 44 நாடுகள் இணைந்து ஓசோன் பாதுகாப்புப் பற்றிய ஒரு கலந்துரையாடலை நிகழ்த்தின. இதன் வழியில் குளோரோபுளோரோ காபன்களின் (CFC) உற்பத்தியை முதலில் தடை செய்த நாடாக சுவீடன் அமைகிறது. தொடர்ந்து கனடா, ஜேர்மன் நாடுகள் இதனைப் பின்பற்றின. 1990 ஜூனில் 70 நாடுகள் லண்டனில் கூடி ஓசோனைப் பாதுகாக்கும் தொழினுட்ப பரிவர்த்தனை, குளோ ரோபுளோரோ காபன்களின் உற்பத்தியைத் தடை செய்தல் ஆகியன பற்றிய கலந்துரையாடலை நிகழ்த் தின.

அதிசயிக்கும் விதமாக ஓசோனில் ஏற்பட்டிருந்த இராட்சதத் துளை தாமாக மூடிக்கொண்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஓசோன் படலத்தில் ஏற் பட்டிருந்த மிகப்பெரிய துளை தாமாக மூடிக்கொண்ட




தற்கு பூமியில் இருந்து வெளியாகும் பசுமை இல்ல வாயுக்களின் அளவு குறைந்ததே காரணம் என சுற் றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வந்தனர். ஆனால் இந்தக் கூற்றினை விஞ்ஞானிகள் திட்ட வட்டமாக மறுத்துள்ளனர். ஓசோனில் மிகப்பெரிய துளை ஏற்பட்டதும், அது தாமாக மூடியதும் 'போலார் வோர்டெக்ஸ்' எனப்படும் வாயு சுழற்சியே காரணம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி 2050ஆம் ஆண்டுகளில் ஓசோன் குறைபாடு எவ்வாறு காணப் படும் என்பது பற்றி முன்பு எதிர்வு கூறப்பட்டது. மொன் றியல் உடன்படிக்கையின் கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின் மத்திய கோட்டுப் பகுதியில் ஓசோனின் குறைவுபடும் தன்மை நான்கு சதவீதத்திற்குப் பதில் ஒரு சதவீதமாகக் குறைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தாட்டிக்கா மீது ஓசோன் அடுக்கில் உள்ள துவாரம் (துளை) இறுதி யாக மூடத் தொடங்குகிறது என்பதற்கான ஆதாரங் களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்த முன்னேற்றம் தொடர்ந்தால், 2050ஆம் ஆண்டிற் குள் நிரந்தரமாக மூடப்பட வேண்டும் எனவும் விஞ் ஞானிகள் எதிர்வு கூறியுள்ளார்கள். அத்துடன் 2030 ஆம் ஆண்டிற்குள் ஓசோன் படலம் பழைய நிலைக்கு வந்துவிடும் எனவும் ஒரு கணிப்பு கணிக்கப்பட்டி ருக்கிறது.



காலைக்கதிர் Kalaikkathir



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)

"ஒரு பறவை எவ்வளவு உயரமாகச் சிறகடித்துப் பறந்தாலும் ஈற்றில் அது ஒரு மர உச்சியில் ஆறிய மரும். அதுபோல ஒருவன் எவ்வளவு தூரம் அகங்காரமாக, இறைநம்பிக்கையற்று அலமந்து வாழ்ந்தாலும் இறுதியில் அவன் தெளிவுபெறுவான்.

'இறைவா எனக்கு ஆறுதலைத் தா! இன்பத்தைத் தா! தைரியத்தைத் தா! சாந்தியைத் தா!' என்று குழைந்து, குழைந்து குழறுவான்."

பகவான் பாபாவின் இப்பொன்மொழியைச் செவிசாய்த்த சாயிபக்தர்கள் மட்டக்களப்பு ஆயர் பேரருட்திரு.ஜோசப் பொன்னையா அவர்கள் பாபா பற்றி, அவர்தம் சிந்தனைகள், சத்தியசாயி சேவாமன்றங்கள் ஆற்றும் பணிகள்பற்றி கூறியுள்ள பின்வரும் கருத்துக்களில் மனம்லயித்து நிற்கின்றனர்:-


'பல்லின மக்களும், பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களும் நெருங்கிய தோழமையுடன் வாழ்கின்ற சிறப்புப்பெற்ற மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பு மாநகரில் இயங்கிவரும் பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபா சமித்தியின் அனுக்கிரக மண்டபத்துக்கு வாழ்த்துச் செய்தியனுப்புவதில் பேருவகை அடைகிறேன்.

பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபா எனக்கூறும்போதே அருள்பாலிக்கும் அவரது திருவுருவம் என் மனக்கண் முன் தோன்றி மறைவதை உணரமுடிகிறது. நான் 1970 - 1990 காலப்பகுதியில் இந்தியாவில் மெய்யியல், இறையியல் ஆகிய துறைகளில் மேற்படிப்பை மேற்கொண்டிருந்தபோது, பெங்களூரில் பகவானின் வதிவிடமான வைட்பீல்ட் என்னுமிடத்



மட்டக்களப்பு ஆயர் பேரருட் திரு.ஜோசப் பொன்னையா அடிகள்

துக்குச் சென்று அவரின் தரிசனம்பெற வாய்ப்புக் கிடைத்தது. அங்கு நடைபெற்ற பஜனை வழிபாட்டிலும், இன,மத, மொழி வேறுபாடின்றி பங்குபெற அனுமதி கிடைத்தது.



சாயிபாபா அனுக்கிரக மண்டபம் என்றாலே, எமது உள்ளத்தை நெகிழ வைத்து இறைவனோடு சங்கமிக்க வைக்கும் பஜனைகள்தான் இன்றும் என்மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளன. எங்கெல்லாம் பஜனைச் சத்தம் கேட்கின்றதோ அங்கெல்லாம் சென்று கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் என்றும் உள்ளது.

'ஒன்றே குலம்! ஒருவனே தெய்வம்! எம்மதமும் சம்மதமே!' என்னும் ஓருலக மனப்பான்மையையும், அதற்கு அடிப்படையான பரந்த மனப்பான்மையையும் கொண்ட பகவான் முன்வைக்கும் நாலு கொள்கைகளும் என்னைக் கவர்ந்தவை ஆகும்.

**'ஒரே மதந்தான் உண்டு. அது அன்பெனும் மதம்!**
**ஒரே ஜாதிதான் உண்டு. அதுவே மானுட ஜாதி!**
**ஒரே பாஷைதான் உண்டு. அது இதயத்தின் பாஷை!**
**ஒரே கடவுள்தான் உண்டு. அவர் எங்கும் நிறைந்தவர்!**

'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு! நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே! நன்றிது தேர்ந்திடல் வேண்டும். இந்த ஞானம்வந்தாற்பின் நமக்கெது வேண்டும்' என்ற உண்மையைத் தேர்ந்து தெளிந்து உலகிற்கு வழிகாட்டிய பாட்டுக்கொரு புலவன் பாரதிபோன்று, இனத்தின் பெயரால், மொழியின் பெயரால், சாதியின் பெயரால் பிளவுபட்டிருக்கும், முரண்பட்டிருக்கும் மனுக்குலத்தை மாற்றி அமைக்க, மனிதர்கள் சிறந்த மனிதர்களாகி, அர்த்தமும், உயர்ந்த நோக்கமும் உள்ள வாழ்க்கை நடத்த பகவான் சத்தியபாபா முன்வைக்கும் போதனைகள் பெரும்பாலும் எல்லோராலும் கடைப்பிடிக்கக் கூடியவையாகும்.

ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையம் ஆற்றும் ஆன்மீகப் பணி, கலவிப்பணி, சேவைப்பணி போன்றவற்றின் மூலம் பயன்பெற்ற, பயன்பெற்றுக் கொண்டிருக்கின்ற, பெறப்போகின்ற அனைத்து உள்ளங்களும் பகவானின் அருள் நிரம்பப்பெற்று அவரது போதனைளைப் பின்பற்றித் தங்கள் வாழ்க்கையையே மாற்றியமைத்து, முக்திநிலை அடைவார்களாக! அனைவருக்கும் இறையாசி வேண்டி நிற்கின்றேன்.'

**ஓடிஓடி கிராமசேவை செய்துவருகிறோம்**
**கூடிக்கூடி உன்புகழைப் பேசிமகிழ்கின்றோம்**
**தேடித்தேடி உரியவருக்கு உதவிசெய்கின்றோம்**
**கோடிகோடி நாமம்சொல்லி உம்மை அழைக்கின்றோம்**
**நாடிநாடி இரும்பைக் காந்தம் இழுப்பதைப் பார்த்தோம்**
**பாடிப்பாடி உருகி எம்மை உம்முடன் சேர்ப்போம்**
**தெளியவில்லையே! மர்மம் தெரியவில்லையே!**
**தேவரகசியம் இன்னும் புரியவில்லையே!**

- எனப் பாடுகிறார் திருக்கோயில் இரா.தெய்வராஜன்.

# பட்டதாரிகளின் பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்குத் தீர்மானிக்கவில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

பட்டதாரிகளின் பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயிற்சிக் காலத்தை மேலும் 6 மாதத்துக்கு நீடிப்பதற்கான பத்திரம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

53 ஆயிரம் பயிற்சி பட்டதாரிகளில் 18 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் அந்தப் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அந்தப் பணிகளை விரைவுப்படுத்தி, எஞ்சியவர்களையும் அரசசேவையில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினரை அறிவுறுத்துமாறு ஜனாதிபதி விடயதான அமைச்சர்களைப் பணித்தார் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும



மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகளை அச்சுறுத்திய லொஹான் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகல்

## ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இராஜிநாமாக் கடிதம்

**அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு விவகார இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தனது அமைச்சுப் பதவியை நேற்று இராஜிநாமா செய்தார்.**



தனது இராஜிநாமா பற்றி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் முற்பகல் அவர் அறிவித்த நிலையில், ஜனாதிபதியும் அவருடைய இராஜிநாமாவை ஏற்றுக்கொண்டார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கடந்த 12ஆம் திகதி மதுபோதையில் கைத்துப்பாக்கியுடன் சென்ற லொஹான் ரத்வத்த, அங்கு தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்தலை விடுத்திருந்தார். அதேவேளை, மறுநாள் வெலிக்கடை சிறைச்சாலைக்கும் அவர் மதுபோதையுடன் சென்றிருந்தார்.

இந்தச் சம்பவங்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டுத் தரப்பினர் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர். இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து லொஹான் ரத்வத்தவை உடனடியாக நீக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் மேற்படி தரப்பினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டம் தற்போது நடந்துவரும் சூழ்நிலையில், இராஜாங்க அமைச்சரின் இந்தச் செயற்பாடு இலங்கை அரசுக்கு மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதால் அவரை உடனடியாகப் பதவி விலகுமாறு அரச மேல் மட்டம் கோரி இருந்தது.

இதன்படி தனது இராஜிநாமாக் கடிதத்தை நேற்று முற்பகல் லொஹான் ரத்வத்த, ஜனாதிபதிக்கு அனுப்பினார்.

லொஹான் ரத்வத்தவின் இராஜிநாமாக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

# மன்னார் சோதனைச் சாவடிகளில் தடுப்பூசி அட்டைகள் பரிசோதனை

(ந.லோகதயாளன்)

வீதிகளில் பயணிக்கும் மக்கள் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டமையை உறு திப்படுத்தும் அட்டைகளைப் பரிசோதிக்கும் நடவடிக்கை நேற்று முதல் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகளில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற் பட்டவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக வழங்கப் பட்டு வந்தன.

இதேவேளை, இதுவரையில் தடுப் பூசி பெற் றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற் பட்டவர்களைத் தாமதிக்காது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரத் துறையினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முதல் மன்னார் மாவட் டத்தில் உள்ள சோதனைச் சாவடிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டமைக்கான அட்டை பரிசோதனை செய்யும் நடவடிக்கையை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.



இதன்போது தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களின் தகவல்களை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

இதேவேளை, தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசியை செலுத்தவும் அல்லது அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளவும் சுகாதாரத்துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட் டவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முடிவுக்கு வருகின்ற நிலையில் உள்ளது. இதன் அடிப்படையில் இதுவரையில் 71 ஆயிரத்து 396 பேர் முதலாவது கொரோனாத் தடுப்பூசியையும், 56 ஆயிரத்து 363 பேர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பாதணிகளை நக்கச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிள்ளைகள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் மீது தனது நண்பர்களுடன் மதுபோதையில் இரவு நேரத்தில் துப்பாக்கி முனையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

அக்கும்பல் எமது பிள்ளைகளைத் தமது பாதணிகளை நக்கித் துப்புரவு செய்யச் சொல்லியிருக்கின்றனர். எமது உறவுகளை உயிருடன் பாதுகாக்க முதலில் அவர்களை யாழ்ப்பாணம் சிறைக்கு மாற்றவேண்டும். அதற்கு முன்னதாக அவர்கள் தொடர்பான வழக்குகள் உள்ள நீதிமன்றங்களில் அவர்களை முன்னிலைப்படுத்தி நடந்தவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

கைதிகள் நீதிமன்ற விசாரணைகளுக்காகவே சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவ்வகையில் அவர்களைப் பாதுகாக்க வேண்டியது இலங்கை நீதிமன்றங்களது கடமை.

தமிழ்க் கட்சிகளது பிரதிநிதிகள் குழுவொன்று உடனடியாக நேரில் அநுராதபுரம் சிறைக்குப் பயணம் செய்து தமிழ் அரசியல் கைதிகளது நலன்களை முதலில் கண்காணிக்கவேண்டும்.

16 அரசியல் கைதிகளது விடுதலை பற்றி வெளிவிவகார அமைச்சர் ஜெனிவா அமர்வில் உரையாற்றிக் கொண்டிருக்க, சிறையினுள் கைதிகளை அதற்குப் பொறுப்பான அமைச்சரே கொல்ல முற்படுகின்ற அவலம் நடந்திருக்கின்றது – என்றனர்.

# எட்டுக் கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள்கள் மீட்பு

## தலைமன்னாரில் நால்வர் கைது

(ந.லோகதயாளன்)

தலைமன்னார் கடல் வழியாக நாட்டுக்குக் கடத்தி வரப்பட்ட 7 கோடி 90 லட்சம் ரூபா மதிப்புள்ள ஐஸ் போதைப் பொருளுடன் நான்கு சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த ஒருடிங்கிப் படகும் கைப்பற்றப்பட் டுள்ளது.

படகிலிருந்து 9 கிலோ 914 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

தலைமன்னார், உறுமலை கடற்கரைப் பகுதியில் நேற்று காலை நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது போதைப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

10 பொதிகளில் அடைக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் மொத்த மதிப்பு 7 கோடி 90 லட்சம் ரூபாவுக்கும் மேல் இருக்கும் என்று நம்பப்படுகின்றது.



சந்தேகநபர்கள் நால்வரும் தலைமன்னார் – உறுமலை பகுதியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேகநபர்கள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 67 பேருக்கு மேலும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

### நேற்று நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என நால்வர் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

நெளுக்குளத்தில் ஒருவர், கோவில்குளத்தில் ஒருவர், பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள காப்பகத்தில் இருவர் என அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றால் மரணித்தவர்களாவர்.

இந்நிலையில், மரணித்த 4 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றித் தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

### அரசியல் கைதிகளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறைக் கைதிகளின் வேண்டுகோளுக்கு அமைவாக அமைச்சர் நாமல் குறித்த விஜயத்தை மேற்கொள்கின்றார் என்று அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# திருத் தொண்டால் உயர்ந்து நிற்கும் வர்த்தகப் பெருந்தகை வி.எம்.சண்முகம் ஐயாவின் நூற்றாண்டு ஜயந்தி தினம் இன்று

**எழு வகைப் பிறவி யென்னு**
**மிருங்கடற் சுழியுட் பட்டே**
**தாம் புணை யுதவிக் காப்பாய்**
**மழவிடை யூர்தியாளன்**
**மைந்தனே வியாவி னீங்கி**
**அழகுறு சோலைத் திண்ண**
**புரமிசை யமாந்தாய் போற்றி**

- ஈழத்துச் சிதம்பர புராணம் -

ஈழத்துச் சிதம்பரம் என்னும் புண்ணிய தலத்தை தன்னகத்தே கொண்டு விளங்கும் காரைநகரின் சம்பந்தர் கண்டி என்னும் குறிச்சியில் விநாசித்தம்பி முருகேசு தம்பதிகளின் மகனாக 16.09.1921 இல் சண்முகம் அவர்கள் பிறந்தார். பள்ளிப் பருவம் எய்திய சண்முகம் அவர்களுக்கு காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகராலயப் பிரதமகுருவும், சுப்பிரமணிய வித்தியாசாலைத் தலைமையாசிரியராகவும் இருந்த சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களால் ஏடு தொடக்கி பெற்றோர் கல்வி கற்க வைத்தனர். எட்டாம் தரம் வரை கற்ற சண்முகம் அவர்கள் வியாபாரத்தில் நட்டம் காணவே பெற்றோர் தமது உறவினரின் வர்த்தக நிறுவனம் ஒன்றில் சிப்பந்தியாகச் சேர்த்தனர்.

சண்முகம் அவர்களின் வியாபாரத்துறையின் அதீத ஈடுபாடு காரணமாக 1950ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் 47 கே.கே.எஸ்.வீதியில் வி.எம்.சண்முகம் அன் பிறதர் என்ற வியாபார நிறுவனத்தை ஆரம்பித்தார். வர்த்தகத்துறையில் அவரது வளர்ச்சி காரணமாக யாழ்ப்பாணம் கொழும்பு லொறிப் போக்குவரத்து சேவை மற்றும் கொழும்பு 74, பழைய சோனக தெருவில் சிற்றி அரிக்கனற் கொம்பனி என்ற வர்த்தக நிறுவனத்தையும் 1958ஆம் ஆண்டு ஆரம்பித்தார். வியாபாரத்துறையிலும் யாழ்ப்பாணம் கொழும்பு லொறி போக்குவரத்துச் சேவையிலும் ஒரு முதன்மை வர்த்தகராகத் திகழ்ந்தார். **V.M.S** என்ற விலாசம் இலங்கை எங்கும் மிளிரத் தொடங்கியது.



### அமரரின் திருத் தொண்டுகள்

மற்றவர் பசி தீர்க்க வேண்டும் என்ற சிந்தனையிடில் வளர்ந்த அமரர் சண்முகம் அவர்கள் 1958ஆம் ஆண்டிலிருந்து செல்வச் சந்நிதி முருகன் ஆலய மடாலயத்தின் திருவிழாக்களில் ஒரு நாள் அன்னதான உபயத்தையும் ஈழத்துச் சிதம்பர மடலாயத்திலும் திருவெம்பாவை நாள்களில் 4ஆஆம் திருவிழா அன்னதான உபயத்தையும் செய்துவந்தார். மேலும் ஈழத்துச் சிதம்பர அன்னதானச் சபையின் தலைவராக 1974ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 14 ஆண்டுகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

ஈழத்துச் சிதம்பர திருப்பணி சபையின் நிர்வாகச் சபை உறுப்பினராக இருந்து அவ்வாலயத் திருப்பணிக்கும் மிகுந்த சேவையாற்றினார். இவை எல்லாத்திற்கும் மகுடம் வைத்தமை போன்று காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம் பொறுப்புரிமையாளர் சபையின் பொருளாளராக 1976ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டார். 'பிள்ளையாரைக் கவனியடா'' என்ற தனது தாயாரின் சொல்லை தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டார். கீலமுற்றிருந்த விநாயகராலயத்தைப் புனரமைப்புச் செய்து 1982ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட மிகுந்த அர்ப்பணிப்புடன் தொண்டாற்றினார். விநாயகராலயத் திருப்பணி வேலைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டு சென்றார். இதன் பேறாக 1982ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற பிரமோற்சவம் 1981ஆம் ஆண்டிலிருந்து மகோற்வசமாக நடைபெற ஆரம்பித்தது. ஆலயத் தேர்த் திருப்பணி வேலைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார் அமரர் சண்முகம் அவர்கள். 1990 ஆம் ஆண்டின் மகோற்சவத்தின் போது தேர் வெள்ளோட்டம் நடைபெற திருவருள் கைகூடியது. வெள்ளோட்ட தினத்திற்கு தேர் முடிகளைச் சிற்பாசிரிகளிடம் கையளித்தபின் அன்றிரவே (13.05.1990) விநாயகப் பொருமானின் திருவடி நிழலை அடைந்தார். இன்று அவரது 100ஆவது பிறந்தநாள் நினைவு தினமாகும்.

**- காரைநகர்**
**வேலுப்பிள்ளை சிவகுருநாதன் -**

---

# இனப் படுகொலையும் .....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தொடர்ந்த போரினால் நொந்து நலிவுற்றாலும் தங்களுக்கு நீதி வேண்டுமென்றுதமிழ்தேசியபரப்பிலேயேநின்றார்கள். அதனை வசதியாக பாவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாங்கள்தான் அவர்களது வாரிசுத் தலைவர்கள், தமிழர் உரிமைகளை வென்றெடுப்பதே அவர்களது ஒரே பணி என புறப்பட்டு, 'ஒரு நாட்டுக்குள் இரு தேசங்கள்' தான் யதார்த்தம் என தொடங்கி, பிரிக்கப்படாத, பிரிக்க முடியாத, ஐக்கியமான ஒரு நாட்டிற்குள் சுய ஆட்சி பெறுவோம் என்று மக்களுக்கு சொன்னார்கள். அவற்றைப் பெற்றெடுக்கத் தங்களுக்குத்தான் மக்கள் அதிகாரம் தந்திருக்கிறார்கள், அதற்குப் புலம் பெயர் மக்கள் ஆதரவு தரவேண்டும் என அறை கூவல் விடுத்தார்களே ஒழிய, நாடு கடந்த தமிழ் அரசையோ அதன் நோக்கங்களையோ கணக் கெடுத்தவர்களாகத் தெரியவில்லை.

ஈழத்தில் உள்ள தமிழர்களுக்கு, செயல் பட்டுக் கொண்டிருக்கும் ஒரு தலைமையில்லை, அந்த தலைமை தமிழ் மக்களின் புலம் பெயர்மக்களிடமேகையளிக்கப்பட்டிருக்கிறது என புலம் பெயர் விடுதலைப் புலிகள், புலம்பெயர் மக்கள் எனப் புறப்பட்டனர். 'பாதைகளும் வழிகளும் மாறலாம், ஆனால் இலட்சியம் ஒன்றே' என்று இன்னும் பலர் புறப்பட்டனர். சர்வதேச தமிழ்மன்றம் (Global Tamil Forum), கனடிய தமிழ் காங்கிரஸ், பிரித்தானியதமிழ்மன்றம், தமிழர்ஒருங்கிணைப்பு குழு என நாட்டுக்கு நாடு குறுநில மன்னர்கள் தோன்றினார்கள், வளர்ந்தார்கள். எது அரசியல் தீர்வின் அடிப்படை என்பதிலேயே அவ்வளவு மாற்றங்கள் தோன்றிய பின், அவை எல்லாவற்றையும் மேவி ஒருங்கிணைத்து, சுதந்திர தமிழீழத்தை நோக்கி, யதார்த்த நிலையில் நாடு கடந்த தமிழீழ அரசு பயணிக்குமா அல்லது அதுவும் மற்றவை போல காலத்துக்கு காலம், பத்திரிகைகளுக்குத் தீர்மானம் தருவதும் அரசாங்கங்களுக்கும் ஐ.நாவுக்கும் சமர்ப்பணம் தருபவர்களாகதான் இருப்பார்களா? - இவர்களது நடைமுறைத்திட்டங்கள் என்னவென்று கேள்விகள் எழுந்தன.

அரசியல் தீர்வின் அணுகுமுறையில் பெரிதாக மாற்றங்கள் பேசப்படுவதால், ஈழத் தமிழ் மக்களை ஒட்டித் தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் நாட்டிலுள்ள தலைவர்களிடமா அல்லது புலம்பெயர் தமிழரிடமா? அந்த புலம்பெயர் என்பதுவும் யார்? இவை புதிராகின. ஒற்றுமையான செய்திகள் தமிழ் மக்களுக்குத் தரப்படவில்லை. குறுநில மன்னர்கள் எல்லோரும் ஏற்ற ஒரு மன்னர் புலம் பெயரிலும் அதிகாரம் செலுத்தவுமில்லை.

ஆகவே புலம் பெயரில் இவற்றுக்காகச் செலவிடப் பட்ட நேரங்களும் பணவிரயங்களும் நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களையும், புனரமைப்பு பெற்று சமூகத்தில் உள்ளீடு செய்யவும் வறுமையில் வாடும் போராளிகளுக்கு வாழ்வாதாரம் கொடுக்கவும் பயன்பட்டிருக்கலாம் என்ற வாதங்கள் எழுந்தன.

காலத்திற்கு காலம், நாட்டிற்கு நாடு, நாடாளுமன்றத்தைக் கூட்டுவதையும், தீர்மானங்கள் எடுப்பதையும் தவிர புலம்பெயர் மக்கள் தமிழீழ அரசாங்கம் அமைக்கக்கூடிய சாத்தியகூறுகள் எந்த நாட்டிலும் ஏற்படுத்துவதாகவோ, அதற்கான முன்னேற்றங்களையோ, நிதர்சனங்களையோ காணக்கூடியதாக இருக்கவில்லை, அது யதார்த்தமானதாகவும் மக்களுக்குப்படவில்லை.

இனப்படுகொலை, அட்டூழியங்கள், போர்க் குற்றங்கள் என ஐ.நாவை அணுகி, அதன் மூலம் ஏற்படக்கூடிய சர்வஜன வாக்களிப்பில் சுயநிர்ணய முறையில், சுதந்திர தமிழ் ஈழத்தை அமைப்பது என்பதுதான் இந்த அரசின் பாதையாகவும் இருந்தது. அதில் தொங்கிக் கொண்டே சிலர் நாட்டிலும் சிலர் பயணித்தனர்.

(வளரும்.....)

---

# அடுத்த இரண்டு வாரங்களில் பாடசாலைகளை திறக்க திட்டம்

இலங்கையில் 200 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட சுமார் 5 ஆயிரம் பாடசாலைகளை அடுத்த இரண்டு வாரங்களின் பின்பு திறப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர்கள் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருடன் நேற்று நடைபெற்றகலந்துரையாடலின்போதே இந்தத்தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதன்படி, சுகாதார ஒழுங்கு விதிகளுக்கமைய பாலர் பாடசாலைகள் மற்றும் தரம் 6 வரையான வகுப்புகளை மாத்திரம் கொண்ட பாடசாலைகளைத் திறக்கக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து தற்போது கல்வித்துறைசார் ஊழியர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள நிலையில், இதுவரை தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத பாடசாலை போக்குவரத்து சேவை ஊழியர்களை விரைவில் தடுப்பூசி பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

---

# வைத்தியசாலையில் கைக்குண்டு; திருகோணமலை இளைஞர் கைது!

கொழும்பு, நாரஹேன்பிட்டி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை, உப்புவெளி பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பில் மூவர் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், மருத்துவமனையின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் பலரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மருத்துவமனையின் சி.சி.ரி.வி. கமரா காட்சிகளின் உதவியுடன் சந்தேகநபர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு, நாரஹேன்பிட்டிப் பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையின் முதலாம் மாடியிலுள்ள கழிப்பறையொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் கைக்குண்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டிருந்தனர்.

குறித்த கைக்குண்டு நுளம்புச் சுருளின் உதவியுடன் வெடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும், நுளம்பு சுருள் அணைந்ததன் காரணமாக குண்டு வெடிக்கவில்லை எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல் கைதிகளுக்கு துப்பாக்கி நீட்டி அச்சுறுத்தியமை ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு நேராக நீட்டியமையே!

## அருட்தந்தை மா.சத்திவேல் காட்டம்



அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயல் தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராக நீட்டப்பட்ட துப்பாக்கியாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராக நீட்டிய துப்பாக்கியாகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளுடைய தற்போதைய நிலைவரம் தொடர்பாக நேற்று (புதன்கிழமை) அவரால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் சிறைச்சாலைகளின் இராஜாங்க அமைச்சர் கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அரசியல் கைதிகளை மண்டியிடச்செய்துதலையில் துப்பாக்கியைவைத்துகொலைஅச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராக நீட்டப்பட்ட துப்பாக்கியாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராக நீட்டிய துப்பாக்கியாகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கருதுவதோடு இத்தகைய அநாகரிகமான செயலை மிகவும் வன்மையாகவும் கண்டிக்கின்றது.

இலங்கை மனித உரிமைக்கு மதிப்பு அளிக்கின்றநாடுஎனில்குறிப்பிட்ட அமைச்சரை அமைச்சுப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கி துரித விசாரணைக்கு உட்படுத்தி உரிய தண்டனை வழங்குவதோடு மனநல சிகிச்சையும் அளித்தல் வேண்டும். அதுவே இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு காட்டுகின்ற நல்லெண்ண சமிக்ஞையாக அமையும். இல்லையெனில் இது இலங்கை அரசும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கெதிராக செயற்படுகின்றது என்பதை சுட்டி நிற்கும்.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாகவும், இந்தச் சட்டத்தால் நீண்ட காலம் சிறையில் வாடுவோரின் மனித உரிமை விடயமாகவும் ஆராய ஆட்சியாளர் குழு நியமித்து இருப்பதாக கூறுகின்றமை கேலிக்கூத்தாக அமையும். அது மட்டுமல்ல அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான செயற்பாடு ஐ.நா. மனித உரிமை பேரவையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே அமையும்.

குறிப்பிட்ட அமைச்சரின் செயற்பாடு நீண்டகாலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நம்பிக்கையற்ற நிலைக்கு தள்ளப்படுவதோடு வாழ்க்கையில் விரக்தி நிலையும் ஏற்பட்டு அத்தோடு உளவியல் ரீதியில் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

சிறைச்சாலை கைதிகளைப் பாதுகாக்க வேண்டிய அமைச்சரே இவ்வாறான ஒரு செயலில் ஈடுபடுவதன் மூலம் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது வெளிப்படுவதோடு அனைத்து அரசியல் கைதிகளையும் பாதுகாப்பு மிகுந்த தமிழர் பிரதேசங்களில் சிறைச்சாலைக்கு மாற்றி அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றும் அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளை உடனடியாகப் பாதுகாப்பான தமிழர் பகுதிகளில் உள்ள சிறைச்சாலைக்கு மாற்றி பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும்.

இனவாத ஆட்சியாளர்கள் ஆசியாவின் அறிவாலயம் எரிந்து சாம்பலாகிய இனப் படுகொலையுடனான இன அழிப்போடு நின்றுவிடாது அது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கெல்லாம் நீதி கேட்டுக் கொண்டிருந்த நிலையில் அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இந்நாட்டின் இனவாத அரசில் தமிழ் மக்கள் இனிவரும் காலங்களிலும் அடக்கி ஒடுக்கும் என்பதற்கு இன்னுமொரு சாட்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் ஒரே சக்தியாக நின்றால் மட்டுமே எமது எதிர்காலம் காக்கப்படும்.

இந்தச் சம்பவத்தை கருத்திற்கொண்டு இலங்கையில் நடந்த இனப்படுகொலையுடனான இன அழிப்பிற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதி கிடைக்க வழியேற்படுத்துமாறும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கொண்டு செல்லுமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைச்சாலையில் இரு தமிழ் கைதிகளை மிரட்டிய அமைச்சரின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கதே!

## கலாநிதி ஜனகன் தெரிவிப்பு

இன்று தமிழ் பேசும் இளைஞர் யுவதிகள் பலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக உரிய விசாரணை இல்லாமல் சிறைகளில் கைதிகளாகக் கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர்.

கைதிகளின் நலனைப் பேணும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அமைச்சில் அமைச்சராக இருக்கும் லொகான் ரத்வத்த, வேலியே பயிரை மேய்தலுக்கு ஒப்பாக இரண்டு தமிழ் அரசியல் கைதிகளை தனக்கு முன்னால் முழங்காலில் இருக்கச் செய்துள்ளார்.

அதுமட்டுமன்றி தனது பாதுகாப்பு உத்தியோகத்தரின் உதவியுடன் துப்பாக்கி முனையில் அவர்களை இவ்வாறு முழங்காலில் நிற்பதற்கு வற்புறுத்தியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறான எல்லை மீறிய நடவடிக்கையை எம்மால் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவர் என்ற அடிப்படையில் வன்மையாக கண்டிக்கின்றேன் என கலாநிதி வி.ஜனகன் தன்னுடைய அறிக்கையூடாக குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கையில் பல ஆண்டுகளாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களை கைதுசெய்து உரிய நீதிமன்ற விசாரணைகள் ஏதும் இன்றி தடுத்துவைக்கும் செயற்பாடு ஒரு தொடர் கதையாகவே உள்ளது.

இந்நிலையில் இவ்வாறு சிறைகளில் கைதிகளாக வாடும் எமது இளைஞர்களை வன்கொடுமைக்கு ஆளாக்கும் நடவடிக்கைகள் பல மட்டங்களில் இடம் பெற்றவாறுதான் உள்ளன.

ஆனால் இன்று, அதன் உச்சக் கட்டமாக இலங்கையின் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் ஒருவரே இவ்வாறான இழிவான செயலில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவருவது எம்மை மேலும் வருத்தத்திற்குள் உள்ளாக்கியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் கைதிகளைப் பாதுகாக்கும் உடன்படிக்கையில் பங்காளியாக இருக்கும் இலங்கை, அந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தை மறந்து தொடர்ச்சியாக தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர், யுவதிகளை பழிவாங்கும் கருவியாக இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்திவருகின்றது.



இதனால்தான் இன்று அமைச்சர் ஒருவரே இவ்வாறான இழிவான செயலை எந்த நெருடலும் இன்றி செய்துள்ளளார் எனத் தெரியவருகின்றது. இந்த நடவடிக்கையை எம்மால் எக்காரணத்தின் அடிப்படையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

நிராயுதபாணியாக சிறையில் இருந்த கைதிகள் இருவரை துப்பாகிமுனையில் முழுங்கால்களில் தன் முன்னால் அமரவைத்த அமைச்சர் லொகான் ரத்வத்த, ஒரு ஜனநாய நாட்டின் அமைச்சராக இருப்பதற்கான தகுதியை இழந்துவிட்டார்.

மேலும், சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு முழுமையாகப் பேணப்பட வேண்டும்.

இன ரீதியான இவ்வாறான வன்கொடுமைகள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு பாரிய சவாலாக காலம் காலமாக இலங்கையில் உள்ளது என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்து இனங்களையும் ஒன்றுசேர அரவணைப்பது ஜனாதிபதியின் தலையாய கடமை என்பதை உணர்ந்தவராக இப்படியான ஈனத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மேலும் கேட்டுக்கொள்கின்றோம் என கலாநிதி வி. ஜனகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கருத்துச் சுதந்திரத்துக்கு நாட்டில் அச்சுறுத்தல் இல்லை

## அரசு தெரிவிப்பு

நாட்டில் கருத்து சுதந்திரத்திற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் கருத்து சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை அரசாங்கம் உறுதி செய்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுருக்கமாக பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, வெளிவிவகார அமைச்சின் ஊடாக அரசாங்கம் மிச்செல் பச்லெட்க்கு முழுமையான பதிலை வழங்கும் என்று கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமானது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில், அவசரகாலச்சட்டம் பிறப்பிக்



கப்பட்டுள்ளமை, சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் இராணுவமயமாக்கப்படல், நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளின் நம்பகமான முன்னேற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

இந்த நிலையில் அதற்கு பதிலளிக்கும் வகையில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், உரையாற்றியிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2021 இல் வெளியிடப்பெற்றது.